Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-18

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2036 தை-13 26-01-2005 புதன்கிழமை ஓசை -343




## வெளிநாட்டு உதவிகள் பாதிப்படையலாம்

# சனாதிபதி நியமித்த ஆலோசனைக் குழுவில் அனுபவம் வாய்ந்தோர் இடம்பெறவில்லை!

## ஐக்கிய தேசியக்கட்சி குற்றச்சாட்டு

**நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்ற அரசாங்கத்தின் திட்டத்திற்கு வெளிநாடுகளில் இருந்து நிதியுதவிகளைப் பெறுவதற்கான ஆலோசனைக் குழுவில் சனாதிபதியால் அனுபவம் வாய்ந்தவர்கள் நியமிக்கப் பெறாமையினால் வெளிநாடுகளில் இருந்து கிடைக்கப்பெறக் கூடிய நிதியுதவிகளில் பாதிப்பு ஏற்படலாம் என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.**

பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ணஇந்தக் குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளார்.சனாதிபதி இந்தக்குழுவில் தமக்கு வேண்டியவர்களை மாத்திரமே நியமித்துள்ளமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.சுனாமியினால் பாதிக்கப்பட்ட இலங்கை நாட்டைக் கட்டியெழுப்ப முதலில் 15 ஆயிரம் கோடிரூபா தேவை என இந்தக் குழுவினர் வெளிநாடுகளுக்கு பரிந்துரை செய்திருந்தனர். எனினும் தற்சமயம் 35 ஆயிரம் கோடி ரூபா தேவை என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் 20 ஆயிரம் கோடி ரூபா மேலதிகமாகக் கோரப்பட்டுள்ளது. அத்துடன் குறிப்பிட்ட பாதை ஒன்றைத் திருத்தம் செய்வதற்கு 6 தடவைகள் நிதியுதவி

(18 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கக் கூட்டமும் வித்துடல் விதைப்பும்

2ஆம் லெப். இறையவனின் வித்துடல் அவரின் சொந்த இடமாகிய ஞானசாரியாா வீதி,கரவெட்டியிலுள்ள அவரது வீட்டிலிருந்து பாண்ட் வாத்தியத்துடன் துன்னாலை ரெலன்ற் தனியார் நிறுவன மண்டபத்திற்கு வித்துடல் கொண்டுவரப்பட்டு அங்கு வீரவணக்கக் கூட்டம இடம்பெற்றது.

இக்கூட்டம் தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த தவயோகம் தலைமையில் இடம் பெற்றது. அங்கு வித் துடலுக்கு மலர்மாலை அணிவிக்கப் (18ஆம் பக்கம் பார்க்க)

### இணைப்பு



கடற்கோள் ஊறின் போது சாவடைந்தோர் நினைவாக வர்ணப் பிரசுரமொன்று இன்றைய ஈழநாதம் நாளேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## சுனாமி நிவாரணக்குழு உறுப்பினர்களுக்கு பாதிக்கப்பட்ட பகுதிகள் குறித்து அறிவில்லை

### சனாதிபதியின் நியமனம் குறித்து பிரதமர் அதிருப்தி

(கொழும்பு)

சுனாமி பேரலைத் தாக்கத்தில் பாதிக்கப்பட்ட மக்களிற்கான நிவாரணப் பணிகளிற்கென அமைக்கப்பட்டுள்ள குழுக்களின் உறுப்பினர்களுக்கு பாதிக்கப்பட்ட பிரதேசம் தொடர்பான அறிவில்லை என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார். சுனாமி நிவாரணக்குழு உறுப்பினர்கள் சனாதிபதியால் நியமிக்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கண்டி தலுகொடறஜ மகாவிகாரையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறுகையில் மீள்கட்டுமானம்

(18 ஆம் பக்கம் பார்க்க)

### அம்பாறை வீநாயகபுரத்தில்

## அகதி முகாமிலிருந்த பெண்ணை இரவில் விசாரணைக்கு அழைத்த படையினர்

(அம்பாறை)

இரவுவேளை அகதிமுகாமில் உள்ள இளம் குடும்பப் பெண் ஒருவரை விசாரணை செய்ய வேண்டும். தங்களுடன் வருமாறு விசேட அதிரடிப்படையினர் கூறியதை அடுத்து மக்கள் பெரும் பீதிக்கும் அச்சத்திற்கும் உள்ளாகியுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள சுனாமி கடல் அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டு விநாயகபுரம் சக்தி வித்தியாலய அகதி முகாமில் தங்கியிருந்த இளம் குடும்பப்பெண் ஒருவரையே நேற்றிரவு ஒன்பது இருபது மணியளவில் முகாமிற்குள் புகுந்த அதிரடிப்படையினர் விசாரிக்க வேண்டுமெனக் கோரி முகாமிற்கு வெளியே அவரை வருமாறு

(18 ஆம் பக்கம் பார்க்க)


## காணாமற் போனோர் நினைவாக முல்லையில் நினைவுப் பேழை அடக்கம்!

### உறவினர் கதறி அழ நடந்த நிகழ்வு

கடல் புவி நடுக்கத்தால் ஏற்பட்ட பேரலைகளில் சிக்கி உயிரிழந்தவர்களின் 31ஆம் நாள் நினைவு நிகழ்வுகள் நேற்று பலபகுதிகளில் நடை பெற்றுள்ளது.

முன்னதாக அலையில் சிக்கி உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்திக்காக எரிபொருள் விற்பனை நிலையத்துக்கு முன்பாக அமைந்துள்ள சூசையப்பர் ஆலயத்தில் காலை 8.45 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது. பேரலையில் சிக்கி காணமற் போனவர்களின் நினைவாக நினைவுப்பேழை வைக்கப்பட்டு பிரார்த்திக்கப்பட்டது. பிரார்த்தனை நிறைவடைந்ததும் காணாமற் போனவர்களினதும், உயிரிழந்தவர்களினதும் பெயர் எழுதப்பட்டு நினைவுப் பேழையில் வைக்கப்பட்டு கடல் அலையின் தாக்கத்தால் சிதைவடைந்து போன புனித இராயப்பர் தேவாலயம் நோக்கி நினைவுப் பேழை ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது. இவ்வாறு எடுத்துவரப் பட்டநினைவுப்பேழை ஆலயத்தின்

(18 ஆம் பக்கம் பார்க்க)



## திருக்கோயில் போராளிகள் மீது சிறில. படையினர் தாக்குதல்

அம்பாறை மாவட்டம் காஞ்சிரங்குடாவிலிருந்து திருக்கோவில் நோக்கி வந்து கொண்டிருந்த இரண்டு போராளிகள் மீது சிறிலங்காப்படையினர் தாக்குதல் நடத்தியதில் அவர்கள் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

நேற்று நள்ளிரவு 11.30 மணியளவில் நடந்த இந்தத் தாக்குதலின் போது ஒரு போராளியின் கையில் பலமான காயம் ஏற்பட்டுள்ளது. மற்றைய போராளியின் உடலின் பல பகுதிகளிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளது.இந்த இரண்டு போராளிகளும் சுனாமியால் பலியான மக்களை நினைவு கூரும் முகமாக இன்று நடைபெறவுள்ள துக்க தினநிகழ்விற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்தவர்கள் எனத் தெரிவிக் கப்படுகிறது.

## சுனாமியில் உயிரிழந்தவர்கள் நினைவாக தாயகத்தில் இன்று பல்வேறு நிகழ்வுகள்

சுனாமி பேரலைத்தாக்கத்தினால் தமிழீழத்தின் பலபகுதிகளிலும் உயிரிழந்தவர்களின் நினைவு நிகழ்வுகள் இன்று தமிழீழத்தின் பலபகுதிகளிலும் நடை பெறுகின்றன.

கிளிநொச்சியில் இன்று காலை 8.30 மணிக்கு கிளி.மாவட்ட அரச செயலகத்திலிருந்து அமைதி ஊர்வலம் ஆரம்பமாகி கிளிநொச்சி கலாச்சார மண்டபத்தினை சென்றடைந்து அங்கு சர்வ மதத்தலைவர்களின் தலைமையில் பிராத்த்தனைகள் இடம் பெறவுள்ளன. இதேபோன்று முல்லை மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் வீதியின் ஐயனார் கோவி லுக்கு அருகில் உடல்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்திலும் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்திலும் காலை 8.30 மணிக்கும் முல்லை நகரப் பகுதியில் காலை 8.30 மணிக்கும் நினைவு கூரும் நிகழ்வுகள் (18 ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமிப் பேரலையால் சாவடைந்தோருக்கு எமது அஞ்சலிகள்

பதாள உலகத்தவரைக் காப்பதற்கு

# பொலிஸ் புலனாய்வுத் துறை மீது அரசியல் வாதிகள் சிலர் அழுத்தம்

பாதாள உலகக் குழுக்களில் உள்ள தமது நெருங்கிய சகாக்களைப் பாதுகாக்கும் வகையிலேயே பொலிசாரின் விசேட குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பிரிவினை செயலற்றதாக்கும் நடவடிக்கையில் சில அரசியல் வாதிகள் ஈடுபட்டு வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடைய முக்கிய அரசியல் வாதிகள் சிலர் இந்த விடயம் தொடர்பில் சனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்து வருவதாக பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

அண்மைக்காலமாக கொழும்பிலும், அதன் சுற்றுப் புறங்களிலும் பாதாள உலகக் குழுக்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை அடுத்தே சனாதிபதி மீது இவர்கள் இந்த அழுத்தங்களைப் பிரயோகித்து வருவதாகத் தெரியவந்துள்ளது. பொலிஸ் அதிரடி நடவடிக்கைகளை அடுத்து முக்கிய பாதாள உலகத் தலைவர்கள் நாட்டை விட்டு வெளியேறியிருப்ப தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## மட்டு. பாண்டிருப்பு பகுதியில் கனேடிய துருப்புக்கள் நடவடிக்கை

மட்டக்களப்பு பாண்டிருப்புப் பகுதியில் கனேடிய இராணுவம் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.கனேடிய இராணுவ அதிகாரி கப்ரன் ஸ்கொட் மால்கம் கருத்து வெளியிடுகையில் தாம் இந்தப் பகுதி மக்களின் சுகாதார தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அங்கு விஜயம் செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தினமும் நூற்றுக்கணக்கான நோயாளர்களுக்கு தமது மருத்துவத் தரப்பினர் சிகிச்சைஅளித்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார். இதே வேளை பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கான சுத்தமான குடி நீரை விநியோகிக்கும் பணிகளில் தமது துருப்பினர் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (32)

## பீதுருதாலகால மலையின் உச்சியில் அமெரிக்கா கண்காணிப்பு நிலையம் அமைக்க முயற்சி

அமெரிக்கப் படைகள் இலங்கையின் அதி உயர் மலைச் சிகரமான பீதுருதாலகால மலையில் அமெரிக்கக் கண்காணிப்பு மையம் ஒன்றை உருவாக்க முயற்சி எடுத்துள்ளதாகத் தெரிய வருகிறது. இது தொடர்பில் சிறிலங்கா அரசாங்கத்திடம் அனுமதி கோரியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை வான்பரப்பில் பறப்பில் ஈடுபடும் வானூர்திகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் ஒன்றை உருவாக்குவதற்கு அனுமதி கோரியே கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்திற்கு இந்த விடயம் தொடர்பில் பல்வேறு தரப்புகளினாலும் பிரயோகிக்கப்பட்ட அழுத்தங்களை அடுத்து அமெரிக்கப் படைகளின் கோரிக்கையின்னை அரசாங்கம் நிராகரித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அமெரிக்கப் படைகள் நாட்டின் பல பாகங்களிலும் அதிசக்தி மிக்க தொலைத் தொடர்பு சாதனங்களை பொருத்தியுள்ளதாகவும் இதனால் தெற்காசியப் பிராந்தியத்தின் பாதுகாப்புக்குப் பாதிப்பு ஏற்படும் என இந்தியப் பாதுகாப்புத் தரப்பு கருதுவதாகவும் இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகராலயம் இலங்கை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதாகவும் அந்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)


## மு/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ. சங்கம்(வ.து)

## கிராமிய வங்கிக்கிளை புதிதாக ஆரம்பித்தல்

எமது சங்க தொழிற்பரப்பில் வசிக்கும் அங்கத்தவர்களினதும், பொதுமக்களினதும் நலன்கருதியும், அவர்களின் சேமிப்புப் பழக்கத்தை அதிகரிக்கும் நோக்கோடு கிராமியவங்கியில் தமது கணக்கில் கூடுதலான பணத்தை சேமம், வைப்புக்களாக வைத்திருக்கும் அங்கத்தவர்களுக்கு முதலீட்டு வசதியை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்கோடு எதிர்காலத்தில் தொழில் முயற்சிக்கான கடன் திட்டங்களை அமுற்படுத்துவதற்கும் எமது சங்க தலைமைக் காரியாலயத்தில் கிராமிய வங்கிக்கிளை ஒன்று எதிர்வரும் 2005.01.27ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.14 முதல் 11.00 மணிவரையான சுபவேளையில் திறக்கப்படவுள்ளது. எனவே அன்றைய தினமோ அல்லது அதற்கு பின்னரோ வங்கிக்கு வருகைதந்து கணக்கினைத் திறப்பதற்கு ஆகக் குறைந்த தொகையாக ரூபா 500/=ஐச் செலுத்தி கணக்கினைத் திறந்துவங்கியின் வாடிக்கையாளராக இணைந்து கொள்ளுமாறு அன்புடன் உங்களை அழைக்கின்றோம்.

தலைவர்,
மு.புதுக்குடியிருப்பு ப.நோ.கூ. சங்கம்,
புதுக்குடியிருப்பு.

(சி-11222)


## மேலதிக அரசஅதிபர் முல்லைக்கு நியமனம்

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு மேலதிக அரசாங்க அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கே. சண்முக்லிங்கம் அவர்களே நேற்று முன்தினம் தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

1987,1988 காலப்பகுதிகளில் முல்லை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகக் கடமையாற்றி விட்டு கொழும்பு சென்றிருந்து தற்போது ஓய்வு பெற்று இருந்த இவர் முல்லைத்தீவு சுனாமியினால் பேரழிவினை சந்தித்துள்ளதால் பாரிய வேலைகள் செய்யப்பட வேண்டும் என்றும் தான் அதற்கான முயற்சிகளில் அரசாங்க அதிபருடன் இணைந்து செயற்படுவேன் என்றும் தெரிவித்தார். (20)

## கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)
கிளிநொச்சி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் க.பொ.த (உ-த) வகுப்புக்களில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கட்கான அவசர கலந்துரையாடல் நாளை வியாழக் கிழமை காலை 10.00 மணிக்கு கிளி நொச்சி வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி வகுப்புக்களில் கல்வி கற்பிக்கும் சகல ஆசிரியர்களையும் இக் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் திரு ப.அரியரத்தினம் கேட்டுக்கொண்டுள்ளார். (சோ)

## கல்வியியற் கல்லூரி நேர்முகத்தேர்வு

கல்வியியற் கல்லூரிக்கு தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வு 29,30.01.2005ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளமை தெரிந்ததே. இதற்கமைய 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்விற்காக அழைக்கப்பட்டவர்கள் அன்றைய தினத்தில் கலந்துகொள்வதில் இடையூறு ஏதும் இருப்பின் 29 ஆம் திகதி சனிக்கிழமையன்று கலந்து கொள்ளலாம் என கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் ப. அரியரத்தினம் கேட்டுக் கொள்கின்றார்.


## வரிவிளம்பரம்

**SCIENCE HALL**

புதுக்குடியிருப்பு
2007- கணித விஞ்ஞானப் பிரிவுகள்9,10,11 இற்கான கணிதம்,ஆங்கிலம்,விஞ்ஞானம், விவசாயம்,தரம் 5 (புலமைப் பரிசில்)வகுப்புகள் 24.01.2005 ஆரம்பமாகியுள்ளது நிர்வாகி.

(5100)

## தவறிவிட்டது

பாலேந்திரன் கலைச்செல்வி 33தோப்புக்காடு கரைநகர் என்பவரது ஆசிரிய பரீட்சைக்கான பெறுபேற்றுச் சான்றிதழ் கிளிநொச்சி சந்தையை அண்மித்த பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சந்தையின் வருவாய்ப்பகுதிச் செயலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். (5469)

## கண்ணீர் அஞ்சலி

**செல்லையா – ரஜனிகாந்(சங்கமன்)**

எங்களில் ஒருவராய் நேற்று வரை ஒன்றாய் உடனாய் நின்றவனே சங்கமனே மீளாத்துயில் மீண்டு மீள வராயே

அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முகவரி:- இல.110,
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
பரதன்,
மல்பில் சேவிஸ்
உரிமையாளரும்,
ஊழியர்களும்.

(5363)

## 31ஆம் நினைவு அஞ்சலி

சுனாமிப் பேரழிவினால் உயிர் நீத்த எமது அலுவலக ஊழியர்களான அமரர்.பிறேமலதா இலங்கேஸ்வரன், அமரர்.பஸ்தியாம்பிள்ளை.

அவருடன் உயிர் நீத்த மாட்டின் நவரத்தின ராசா குடும்பத்தினருக்கும், மற்றும் சுனாமிப் பேரலையால் உயிர் நீத்த அனைவருக்கும் எமது இதயபூர்மானஅஞ்சலியைச்செலுத்துவதோடு அவர் களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி !!!**

என்றும் உங்கள்
பிரிவால் துன்புறும்
பிராந்திய உள்ளூராட்சி
ஆணையாளர் அலுவலகம்,
முல்லைத்தீவு.

தகவல்.
பிராந்திய உள்ளூராட்சி,
உதவி ஆணையாளரும்
உத்தியோகத்தரும்,
முல்லை மாவட்டம்.

(5364)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி




எங்கள் சக ஆசானின்
இதயம் கலந்த உறவாய்
அன்னை தந்தைக்கு
அன்பு மகளாய்
ஏக புத்திரனின்
உயிரோடு கலந்த உறவாய்
இனிய உறவுகளுக்கெல்லாம்
இன்பம் ஊட்டுபவளாய்
தமிழீழ தேசத்தின்
நீதித்துறைக்கோர்
சட்டவாளராய்
இருந்தாயம்மா
எங்கு நீ சென்றாய்
சுனாமியின் கோரப்பிடியில்
நீயும் ஒருத்தியானாய்
நம்ப முடியவில்லையம்மா
பொறுக்க முடியவில்லை.
உன் பிரிவு
தேற்ற முடியவில்லை- உன்
உற்ற துணையை

பிறப்பு 18 . 06 . 1976

இறப்பு 26 . 12 . 2004

**ஜெயசுதன் சிவமதி**

(சட்டவாளர் கிளிநொச்சி நீதி மன்று)

பிரிவால் துயருறும் உறவினரின் சோகத்தில் பங்கெடுப்பதோடு அவரின் ஆத்ம சாந்திக்காகவும், சுனாமி அனர்த்தத்தால் கொல்லப்பட்ட அனைத்து உறவுகளின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்,ஆசிரியர்கள், கல்விசாரா
ஊழியர்கள்,
கிளி/பிரமந்தனாறு ம.வி.
தருமபுரம், பரந்தன்.

(சி-11095)

# ஈராக் நாடாளுமன்றில் பெண்களுக்கு 25வீத இடம் ஒதுக்க புதிய சட்டம்

## -போட்டியிட பெண்கள் அச்சம்

(பாக்தாத்)

**ஈராக் நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு 25வீத இடங்கள் ஒதுக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு கட்சியும் தங்களுடைய வேட்பாளர் பட்டியலில் 25வீத இடங்களில் பெண்களை வேட்பாளர்களாக நிறுத்தியே தீர வேண்டும் என்று அந் நாட்டின் புதிய அரசியல் சட்டம் வலியுறுத்துகிறது. ஆனால் பெண்கள் தேர்தலில் போட்டியிட மட்டுமல்ல வாக்களிக்கவும் அச்சம் கொண் டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

ஆயினும் இதனால் அந் நாட்டுப் பெண்கள் மத்தியில் ஆர்வமோ, மகிழ்சியோ காணப்பட வில்லை. மாறாக வாக்களிக்கப் போவதுகூட நல்லதா, பாதுகாப் பானதா என்ற அச்சமே நிலவு கிறது.

ஈராக்கில் அமெரிக்கா தலை மையிலான பன்னாட்டுப் படைகள் நுழைந்தது. முதலே அங்கு ரண களமாகிவிட்டது. அன்றாடம் தற் கொலைப் படையினர் கார்களில் வெடிகுண்டுகளை நிரப்பிவந்து ராணுவம், பொலிஸ், அரசு, ஆத ரவு அரசியல் தலைவர்கள் ஆகி யோரைக் குறிவைத்துத் தாக் குதல் நடத்துகின்றனர்.

இதில் இரு பிரிவினர் உள் ளனர். இயல்பாகவே அமெரிக் காவை வெறுக்கும் மத நம்பிக் கையுள்ள ஈராக்கியர்கள் ஒரு பிரிவினர். முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனின் பதவிக் காலத்தில் முக்கிய பதவிகளை வகித்து அவர் மூலம் சலுகைகள் பெற்றவர்கள் இரண்டாவது பிரிவினர். இப்போது இரு பிரி வினருமே அமெரிக்காவை ஆத ரிக்கும் ஈராக்கியர்களைக் கூட மூர்க்கத்தனமாகத் தாக்கி வரு கின்றனர்.

இடைக்கால அரசில் அமைச் சராக தேசிய சபை உறுப்பின ராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் களைக் கூட இவர்கள் விட்டு வைக்கவில்லை. சிலரைக் கொலை செய்துவிட்டனர். மற்ற வர்களுக்குக் குறிவைத்துக் கொண்டே இருக்கின்றனர். இத னால் ஒருவித மரண பயத்தி லேயே அவர்கள் காலம் கழிக் கின்றனர். எனவேதான் 25வீதம் என்பதை அவர்கள் ஆர்வமாக ஏற்கவில்லை வாக்களிக்கப் போனால் வீடு திரும்புவோமோ, மாட்டோமோ என்ற அச்சம் வாக் காளர்களுக்கு இருக்கிறது.



ஈராக்கியப் பிரதமர் அலுவலகத்திற் கருகாமையில் கார்க்குண்டுத் தாக்குதல் இடம் பெற்ற இடத்தில் காவல் கடமையில் ஈடு பட்டுள்ள ஈராக்கியப் பொலிசார்.



அமெரிக்க விமானப்படையின் 82 ஆவது பிரிவைச் சேர்ந்த படையினர் ஈராக்கில் திடீர் நடவடிக்கைக்கான பயிற்சியிலீடுபட்டுள்ளனர்.

# பிரதமரின் அலுவலகத்திற்கருகில் ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல்

## -இருவர் பலி;10 பேர் காயம்

(பாக்தாத்)

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை தற்கொலைப் படையைச் சேர்ந்த வர் நடத்திய கார்க்குண்டுத் தாக் குதலில் 2 பேர் கொல்லப்பட் டுள்ளனர். 10 பேர் காயமடைந் தனர்.

இடைக்கால அரசின் பிரதமர் இயத் அல்லாவியின் அலுவ லகத்துக்கு அருகில் இச் சம்ப வம் நடந்தது. இதே இடத்தில் இம்மாதம் 3 ஆம் திகதியும் இதேபோன்ற தாக்குதல் நடந்தது.

முசாப் அல் ஜர்காவி தலை மையில் செயற்படும் அமைப்பு இத்தாக்குதலை மேற்கொண்ட தாக இணையத் தளத்தில் தெரி வித்தது.

அல்லாவியின் அலுவலகத் துக்குச் செல்லும் வழியில் அனும தியற்ற வாகனங்களைத் தடுப் பதற்காக இந்தக் காவல் சாவடி அமைக்கப்பட்டிருக்கிறது. குண்டு களை நிரப்பிய வாகனத்துடன் வந்தவர் அந்தச்சாவடி மீது காரை மோதி வெடிக்கவைத்தார்.

இறந்த இருவரில் ஒருவர் தற் கொலைப் படையைச் சேர்ந்த வராக இருக்கலாம் என்று சந்தே கிக்கப்படுகிறது. காயம் அடைந் தவர்களில் 7 பேர் பொலிஸ் காரர்கள், மற்றவர்கள் சிவி லியன்கள்.

# மூன்று கைதிகள் ஈராக்கில் தீவிரவாதிகளால் சுட்டுக்கொலை

(பாக்தாத்)

ஈராக்கில் அரசுக்கு எதிராகச் செயற்படும்,அபு மூசாப் அல்ஜர் காவி தலைமையிலான தீவிர வாதக் குழுவினர் தாங்கள் பிணையாளர்களாகப் பிடித்து வைத்திருத்த 3லொறிச் சாரதி களைப் பட்டப் பகலில் பலர் பார்த்துக் கொண்டிருக்கும் போதே துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர்.

அமெரிக்கர்களுக்கு உதவி செய்கிறோம் என்று தெரிந்து கொண்டே பணத்துக்காகத் துரோகச் செயலில் ஈடுபட்ட துரோகிகளுக்கு வழங்கப்பட்ட தண்டனை மற்றவர்களுக்கும் ஒரு பாடமாக இருக்கட்டும். என்று இக் காட்சியை விடியோவில் பதிவு செய்து அதை இணையத் தளத் திலும் வெளியிட்டுள்ளனர். அந்த இயக்கத்தினர். இத் தகவல் அதன் மூலமே தெரியவருகிறது.

ஐ.நா மாநாடொ ன்றிற்குச் சென்ற ஈராக் இடைக்கால நிர்வாகப் பிரதமர் இயத்அலாவியுடன் நியூஜோர்க்கில் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் ஈராக் நிலமை குறித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார்.



# கடும் பனிமூட்டத்தால் விபத்துக்கள் சீனாவில் 28 பேர் பலி; 68பேர் காயம்

(பீஜிங்)

சீனாவில் கடும் பனிமூட்டம் காரணமாக ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட இரு வெவ்வேறு சாலை விபத்துகளில் 28 பேர் இறந்தனர். 68 பேர் காயமடைந்தனர்.

ஜியாங்மென்ட் நகருக்கு அருகே அதிவேக சாலைப் பகுதியில் 13கார்கள் மோதிக் கொண்டன. இதில் 24 பேர் இறந்தனர். 30பேர் காய மடைந் தனர். விபத்துக் குறித்து விசார ணைக்கு உத்தரவிடப் பட்டுள்ளது.

ஷென்ஜென்-ஷான்டோ பகுதி யில் நடைபெற்ற விபத்தில் 30 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டன. இதில் 4பேர் இறந்தனர். 38 பேர் காயமடை ந்தனர். உலகிலேயே சீனாவில் தான் சாலை விபத்தில்அதிகம் பேர் பலியாகிறார்கள்.கடந்த ஆண்டு சாலை விபத்தில் ஒரு இலட்சத்து 7ஆயிரம் பேர் பலியா னார்கள். புத்தாண்டையொட்டி இலட்சக் கணக்கான சீனர்கள் சொந்த ஊருக்கும், வீடுகளுக்கும் திரும்பு வதற்காக ஒரேநேரத்தில் புறப்பட்டதால் சாலைகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. குவாண்டாங் மாநிலம் கையாங் எக்ஸ்பிரஸ் போக்கு வரத்து சாலையில் அதிக விபத்துக்கள் ஏற்படுவது வழக்கம்.

# ஓசாமாவின் தலைக்கு விலை உயர்வு 500 கோடி ரூபாவாக்க புஷ் முடிவு

(நியூயோர்க்)

சர்வதேச பயங்கரவாதி ஓசாமா பின்லேடன் தலைக்கு அறிவிக்கப்பட்ட பரிசுத் தொ கையை அடுத்த மாதம் முதல் ரூ.500கோடியாக உயர்த்த அமெ ரிக்கா திட்டமிட்டுள்ளது.

அல்-குவைதா தீவிரவாத அமைப்புத் தலைவர் ஓசாமா பின் லேடனை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடிக்க அமெரிக்கா தீவிரமாக உள்ளது. ஆப்கானி ஸ்தான்- பாகிஸ்தான் எல்லையில் 2ஆயிரத்து 500 கி.மீ. நீளத்துக்குப் பரந்து விரிந்துள்ள காட்டுப் பகுதியில் அவர் மறைந்திருப் பதாக அமெரிக்கா. சந்தேகிக் கிறது.ஆனால் அவரைப் பிடிக்க முடியாமல் திணறிக் கொண்டி ருக்கிறது அமெரிக்கா இப் பகுதிகளில் அவர் இருப்பதற்கான அடையாளம் எதுவுமே தெரிய வில்லை என்று பாகிஸ்தான் கூறி வருகின்றது.

ஓசாமாவின் தலைக்கு அமெரி க்கா ரூ.225 கோடி பரிசுத் தொ கையை ஏற்கனவே அறிவித் துள்ளது. இது அறிவிக்கப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு மேலா கியும் பலன் எதுவும் கிடைக் கவில்லை. எனவே அவருடைய தலைக்கான பரிசுத் தொகையை அடுத்த மாதம் முதல் ரூ.500 கோடியாக உயர்த்த அமெரிக்க அதிபர் புஷ் திட்டமிட்டுள்ளார்.

பரிசுத் தொகையைப்பற்றி ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் மக்களுக்கு நினைவுபடுத்த, அமெ ரிக்கா விளம்பரம் செய்ய ஆரம் பித்துள்ளது. பாகிஸ்தானில் அதிகம் விற்பனையாகும் 'ஜங்' என்ற பத்திரிகையில், இம் மாதம் முதல் விளம்பரம் வெளியிடப் பட்டு வருகிறது. வானொலி, தொ லைக்காட்சிகளிலும் விரைவில் விளம்பரம் செய்ய திட்டமிடப் பட்டுள்ளது.

# ஐ.நா.பாதுகாப்புச் சபையில் இந்.வுக்கு நிரந்தர இடம் கிடைக்க சீனா ஆதரவு

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபை இந்தியாவிற்கு நிரந்தர இடம் வழங்க சீனா ஆதரவு தெரி வித்துள்ளது.

இது தொடர்பான பேச்சு வார்த்தை டில்லியில் நேற்று முன் தினம் தொடங்கியது. இதில் இந்திய வெளியுறவுச் செயலாளர் ஷியாக்சரன் சீன வெளியுறவுத் துறைதுணை அமைச்சர் யுதாவி ஆகியோர் தலைமையிலான குழு க்கள் இந்தப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

இதில் பிராந்திய அளவிலும் சர்வதேச அளவிலும் எதிர் கொள்ள வேண்டிய பிரச்சினை கள் குறித்தும் இரு தரப்பும் முக்கியகருத்துக்களைப் பறி மாறிக்கொண்டனர்.

இது தொடர்பாக இந்திய வெளியுறவுத் துறைச்செய்தித் தொடர்பாளர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்:- ஐ.நா. அமைப்பை மாற்றி அமைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய சீனா அதில் இந்தி யாவின்பங்களிப்பு இருக்க வேண் டியது அவசியம் எனக் கூறியுள்ளது. மேலும் ஐநா.பாதுகாப்பு சபை இந்தி யாவுக்கு நிரந்தர இடம் வழங்கு வதற்கான பேச்சுவார்த்தையின் போது சீனா ஆதரவு தெரிவித் துள்ளது எனக் கூறியுள்ளார்.

# மதுபான விடுதிகளில் புகைபிடிக்கத் தடை

இங்கிலாந்தில் பல்வேறு நகரங்களில் 650 மதுபான விடுதிகளை நடத்திவரும் நிறுவனம் 'வெதர்ஸ்பூன்' அடுத்த ஆண்டு மே மாதம் முதல் மதுபான விடுதிகளில் புகை பிடிக்கத்தடை விதிக்கப்படும் என்று இந்த நிறுவனம் அறிவித்துள்ளது.இந்த ஆண்டு மே மாதம் முதல் 60 விடுதிகளில் புகைபிடிக்கத் தடை வரும் என்றும் அது அறிவித்துள்ளது.

புகை பிடிப்பதைக் கைவிடும் பழக்கம் அதிகரித்து வருகிறது. மதுபான விடுதிகளில் நிறையப்பேர் புகைபிடிப்பதால் பலர் அங்கு வரத் தயங்குகிறார்கள் என்று அந்த நிறுவனத் தலைவர் டிம்மார்ட்டின் கூறியிருக்கிறார்.

# கடற்படைத்தளபதி, ஊடகத்துறை அமைச்சர் தமது பதவிகளை விட்டு விலகவேண்டும்

## திருமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை வேண்டுகோள்

(திருமலை)

**சிறிலங்காவின் கடற்படைத்தளபதியும் முப்படைகளின் தளபதியுமான தயாசந்தகிரியும் ஊடகத்துறை அமைச்சரும் பகிரங்க மன்னிப்புக் கோருவதுடன் தங்கள் பதவிகளை இராஜினாமா செய்ய வேண்டும். இவ்வாறு திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை வேண்டுகோள்விடுத்துள்ளது.**

இது சம்பந்தமாக அதன் தலைவர் வ.விக்னேஸ்வரன் விடுத்துள்ள அறிக்கையில், தமிழீழ தேசியத் தலைவர் மாண்புமிகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் இறந்து விட்டதாக திட்டமிட்ட அடிப்படையில் பொய்யான செய்திகளை ஊடகங்களுக்கு வழங்கி, சிறிலங்கா அரசாங்கத்தின் தேசிய ஒலிபரப்பும், ஒளிபரப்பும் மோசமான செய்தியினை வெளியிடுவதற்கு கடற்படைத் தளபதியும், ஊடகத்துறை அமைச்சரும் பொறுப்பாக இருந்துள்ளனர்.

கடற்படைத்தளபதியை மேற்கோள்காட்டியே இனவாத ஊடகங்களும், சிறிலங்கா அரசாங்கத்தின் ஊடகங்களும் இச்செய்தியினை வெளியிட்டன. இவ்வாறான செயற்பாடுகள் ஏற்கனவேயும் நடைபெற்றுள்ளன. இவர்களினது ஆழ்மனத்தில் ஒவ்வொரு நொடிச் சிந்தனையும் எமது தேசியத் தலைவர் சாக வேண்டும் என்பதே. இவ் எண்ணத்தின் வெளிப்பாடுகளை அவ்வப்போது வெளியிடத் தவறவில்லை. இந்திய இராணுவம் வடகிழக்கில் நிலை கொண்டிருந்த போதும் அதன் பின்னரும் ஏற்கனவே இவ்வாறான செய்திகளை வெளியிட்டிருந்தது.

தற்போதும் இவ்வாறான செய்தியை வெளியிட்டதன் மூலம் சமாதானத்திற்கெதிரான மிகப் பயங்கரமான சதிநாச வேலைகளில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதனை தெளிவுபடுத்தியுள்ளனர். எனவே இந்த மோசமான நடவடிக்கைக்கு பொறுப்பேற்று கடற்படைத்தளபதியும், ஊடகத்துறை அமைச்சரும் தங்கள் பதவிகளை இராஜினாமா செய்வதுடன் பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண்டுமென திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை சார்பாக கேட்டுக் கொள்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நீர் சுத்திகரிக்கும் கருவி வழங்கல்

(முல்லை)

தென்னாபிரிக்க மக்களின் அனுசரணையுடன் ஏலஸ் என்ற அரச சார்பற்ற நிறுவனத்தால் நீர் சுத்திகரிக்கும் கருவியொன்று நேற்று முன்தினம் முல்லை செயலணிச் செயலகத்தில் வழங்கப்பட்டது.(20)

# அதிகாலை வேளை வதந்தியால் கல்முனையில் மக்கள் ஓட்டம்!

(மட்டக்களப்பு)

மருதமுனையில் கிணறு ஒன்றிலிருந்து நீர் சூடாகி கொதித்து குமுறி எழுகின்றது என கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3.00 மணிக்கு வதந்தி ஒன்று பரப்பப்பட்டது. இதனால் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த கல்முனைப் பிரதேசத்திலுள்ள மக்கள் தாம் உடுத்திருந்த உடுப்புகளுடன் குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடினர்.

இந்த வதந்தி தொலைபேசிகள் மூலமாக கல்முனை, கல்முனைக்குடி, மருதமுனை, பாண்டிருப்பு, சாய்ந்தமருது பகுதி எங்கும் வேகமாகப் பரப்பப்பட்டதால் இப்பிரதேசங்களிலுள்ள அனைவரும் அச்சம் காரணமாக உறங்காமல் காலை வரை விழித்திருந்தனர்.

# தற்காலிக கூடாரங்களுள் வெள்ளம் இடம்பெயர்ந்த மக்கள் அவலம்!

கிழக்கில் கடந்த சில நாட்களாகத் தொடர்ந்து பெய்து வரும் மழையி னால் கடற்கோள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கூடாரங்களுக்குள் வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இதனால் இங்குள்ள மக்கள் தற்காலிக கூடாரங்களை விட்டு வேறு பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து கொண்டிருக்கின்றனர்.

கிழக்கில் தொடர்ந்து பெய்து வரும், மழையினால் வீடுகளிலும், வீதிகளிலும் நலன்புரி நிலையங்களிலும் வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இம் மக்களுக்காக அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கூடாரங்கள் உறுதியானதாக இல்லை. இதனால் குழந்தைகள், சிறுவர்கள் பெரியோர்கள் நோயாளிகள் பாதிக்கப்பட்டு வருவதோடு பல்வேறு சொல்லொணாத் துயரங்களையும் அனுபவித்து வருகின்றனர்.

# இலங்கை வாழ் கொரிய மக்கள் பாதிப்புற்ற மக்களுக்கு உதவி

(மட்டக்களப்பு)

இலங்கையில் வாழும்கொரிய நாட்டு மக்கள் சுனாமி கடல் பேரலை காரணமாக நிர்க்கதியாக்கப்பட்ட மட்டக்களப்பு அம் பாறை மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு பல்வேறுபட்ட உதவிகளை நல்கி வருகின்றனர். இதற்கமைய அகதிகளாக்கப்பட்ட மக்களுக்கு கல்முனை மெதடிஸ்ததிருச்சபையினூடாக உலர் உணவுப் பொருட்களையும், இம் மக்களின் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு வேண்டிய கற்றல் உபகரணங்களையும் வழங்கி வருகின்றனர்.

சுனாமி கடற்பேரலை காரணமாக வெகுவாகப் பாதிக்கப்பட்ட கோமாரி- திருக்கோவில், கல்முனை, பாண்டியிருப்பு, பெரிய கல்லாறு, பிரதேச மக்களுக்கான அரிசி ,சீனி, பருப்பு கடலை என்பவற்றை மட்டக்களப்பில் பணியாற்றும் கொரிய நாட்டு பிரதிநிதி அருட் திரு. பாக் கல்முனை மெதடிஸ்த சேகர முகாமைக்குரு அருட்செல்வி யோதினி சீனித் தம்பியிடம் வெள்ளியன்று கையளித்தார். இந் நிகழ்வில் கொரிய நாட்டு குழுவிற்கு தலைமை வகித்து வந்த எஸ்.வை ஹிம் கலந்து கொண்டார்.

இதேவேளை இலங்கையில் வாழும் கொரிய நாட்டு குழுவினர் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வைத்திய உதவிகள் உளவிருத்தி செய்ற்பாடுகள் என்பனவற்றை விரைவில் .நடைமுறைப்படுத்தவுள்ளனர் என்று அருட்திரு. பாக் தெரிவித்தார்.

# கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் பூநகரியில் திறப்பு

(பூநகரி)

பூநகரி வாடியடியில் கடற்றொழில் சங்கங்களின் சமாசத் திறப்பு விழா கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

முதல் நிகழ்வாக மங்கல விளக்கை பூநகரி ப.நோ.கூ சங்க கணக்காளரும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவன திட்ட இணைப்பாளர், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவன பிரதிநிதி, கண்டாவளை கடற்றொழில் சங்கங்களின் சமாசத் தலைவர் ஆகியோர் ஏற்றினர். அதனைத் தொடர்ந்து தேசியக் கொடியை மன்னார் மாவட்ட கடற்புலி அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழன் ஏற்றி வைக்க கூட்டுறவுக் கொடியை கடற்றொழில் கூட்டுறவு உதவி ஆணையாளர் சிங்க நாயகமும் சமாசக் கொடியை தலைவர் யோ.பிரான்சிஸ்சும் ஏற்றி வைத்த னர்.

வரவேற்புரையை முன்னை நாள் தலைவர் செ.சிந்தாத்துரை ஆற்றினார். தொடர்ந்து பெயர்ப் பலகையை பூநகரி கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் வேங்கைத் தமிழன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

பிரதான மண்டபத்தினை பிரதம விருந்தினரான கிளி. அரச அதிபர் நாடாவை வெட்டித் திறக்க, கணினி அறையை பூநகரி ம.வி அதிபர் பொன்.தில்லைநாதன் திறந்து வைத்தார்.

சிறப்புரைகளை கடற்புலி அரசியல் துறை பொறுப்பாளர் பங்குத் தந்தை லியோ ஆம்ஸ்ரோங், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி பிரதிநிதி, கூட்டுறவு ஆணையாளா், அரச அதிபர் ஆகியோர் ஆற்றினர்.

நன்றியுரையை கௌரவ உறுப்பினர் வ.இராசலிங்கம் ஆற்றியதைத் தொடர்ந்து நிகழ்வு நிறைவுற்றது. இந் நிகழ்வில் சகல கடற்றொழில் சங்கங்களின் நிர்வாக உறுப்பினர்களும் பொது மக்களும் கலந்து கொண்டனர். (34)

# உளவள சிகிச்சை வழங்க 40 ஆசிரியர்களுக்குப் பயிற்சி

(திருமலை)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் திருகோணமலை அலுவலகத்தினர் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சுடன் இணைந்து கடல்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் இருப்போருக்கு உளவள சிகிச்சைகளை வழங்கி வருகிறது.

இதில் உளவளத் துணை ஆலோசகர்களும், நட்புறவாளர்களுமாக ஜிரிசட் நிறுவனத்தால் பயிற்சியளிக்கப்பட்ட 40 ஆசிரியர்கள் பங்கு கொள்கின்றனர். இவர்களுக்கான பயிற்சி செயலமர்வு ஒன்று வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் முகாமைத்துவ நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது.

# அரிசி ஆலை நிறுவுவதற்கு அனுமதி பெற நடவடிக்கை

(பூநகரி)

மீளக் குடியமர்ந்த பூநகரி வாழ் மக்களிற்கு சில பிரதேசங்களில் நெல் குற்றுவதற்கு நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது. இந் நிலைமையைக் கருத்திற் கொண்டு பூநகரி ப.நோ.கூட்டுறவுச் சங்கம் கறுக்காய் தீவு, செட்டியாக் குறிஞ்சி, ஞானிமடம், சித்தங்குறிஞ்சி ஆகிய பகுதிகளை அண்டிய பிரதேசத்திலும் மட்டுவில் நாட்டிலும் அரிசி ஆலை அமைக்க முடிவு செய்துள்ளது என பூ.ப.நோ.கூட்டுறவு சங்கத் தலைவர் கா.கார்த்திகேசு தெரிவித்தார்.

இது விடயமாக தாங்கள் பிரதேச சபையுடன் தொடர்பு கொண்டதாகவும், உரிய இடத்தில் போடுவதற்குத் தங்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை எனக் கவலையுடன் தெரிவித்தார். இது விடயமாக மீண்டும் அவர்களுடன் தொடர்பு கொண்டு அரிசி ஆலையை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு மக்களிற்கு சேவையாற்ற தமது சங்கம் தீர்மானித்துள்ளதாகவும் கூறினார். (34)

# பூநகரியில் 30 பயனாளிகளுக்கு பயிர்ச் செய்கைக்கு உதவி

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் பூநகரி பிரதேசத்தில் பயனாளிகளுக்கு மரக்கறி விதைவகைகள், சிறுதானியங்கள். மாமரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

மேற்படி நிகழ்வு பூநகரி பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன செயலகத்தில் 19-01-2005 புதன் மாலை 3.00 மணியளவில் பூநகரி விவசாய போதனாசிரியர் திருமதி.நடராசா-சத்யா தலைமையில் இடம் பெற்றது.பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 30 பயனாளிகளுக்கு மரக்கறி விதைவகைகள், சிறுதானியங்கள், நல்லின மாமரக் கன்றுகள் என்பன வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி-சீ.ஆனந்தராசா மற்றும் பூநகரி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் வி.சதீஸ், கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் க.சூரியகுமாரன் மற்றும் விவசாயிகள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர். (34)

# திருமலையில் வெளிநாட்டு பெண்ணொருவர் சிறிலங்கா இராணுவத்தால் கடத்தல்!

## –தடுக்க முற்பட்ட பொது மக்களும் அச்சுறுத்தல்

(திருமலை)

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவ சேவை வழங்குவதற்காக மருத்துவ உபகரணங்களுடனும் மருந்துகளுடனும் வருகை தந்து திருமலையில் சேவையாற்றிய செக்கோசிலாவாக்கியப் பெண்ணொருவர் சிறிலங்கா இராணுவத்தால் கடத்திச் செல்லப் பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் தனியார் மருத்துவமனையொன்றின் முன்பாக இந்தப் பெண்மணி நின்ற போது 9395 என்ற இலக்கம் கொண்ட இராணுவ ட்ரக் வண்டியில் இந்தப் பெண் பலாத்காரமாக ஏற்றிச் செல்லப்பட்டுள்ளார். இந்தப் பெண்ணைக் கட்டாயப்படுத்தி இராணுவத்தினர் வாகனத்தில் ஏற்றிய போது இதனைக் கண்ணுற்ற பொது மக்கள் இராணுவத்தினரிடம் நியாயம் கேட்டபோது தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆயுதம் கொடுக்கவா இவர்கள் திருமலைக்கு வந்திருக்கின்றார்கள் என சிறிலங்காஅரச ஆக்கிரமிப்புப் படையினர் கேட்டுள்ளனர்.

இராணுவ ட்ரக் வண்டியில் இரண்டு அமெரிக்கப் படையினரும் இருந்ததாகவும் அறிய முடிகின்றது. இராணுவத்தினரால் ஏற்றிச் செல்லப்பட்டவருக்கு என்ன நடந்தது என்பது பற்றி இதுவரை எதுவும் தெரியவில்லையென்று பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

# பிலிப்பைன்ஸ் மருத்துவக்குழுவினர் வடக்கு-கிழக்கில் மருத்துவ சேவை

கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சையளிக்கவென 38 அங்கத்தவர்களைக் கொண்ட பிலிப்பைன்ஸ் மருத்துவக்குழு நேற்றுக் காலை இலங்கையை வந்தடைந்துள்ளது. இவர்கள் வடக்குக் கிழக்குப் பகுதியில் சேவையாற்றுவார்களென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதுவரை 60 நாடுகளைச் சேர்ந்த 70 வைத்தியக் குழுக்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டு அவை சேவையாற்றி வருகின்றன. இதில் உலகப் புகழ் பெற்ற 6 சத்திரசிகிச்சைப் பேராசிரியர்களும் அடங்கியிருப்பதாகவும் சுகாதார அமைச்சுதெரிவித்துள்ளது.

# பாதிப்புற்ற மாணவர்களுக்கு தமிழ் மாணவர் ஒன்றியம் உதவி

(யாழ்ப்பாணம்)

**தமிழ் மாணவர்களின் ஒருமித்த சக்தியாகத் திகழும் தமிழ் மாணவர் ஒன்றியமானது துறைமுக அலையின் பாதிப்பால் பாதிப்புற்ற மாணவர்களுக்கு உதவி வருகின்றது.**

சுனாமி கல்வி நிவாரணப்பணி மூலம் சேகரிக்கப்பட்ட கல்விசார் பொருட்கள் கட்டம் கட்டமாக அனைத்து பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றன.

பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் போன்றோர் உதவிகளைப் பெற்று வருகின்றனர். அத்துடன் இழந்த பாடக்குறிப்புக்களை வழங்கும் நடவடிக்கை இடம் பெற்று வருகின்றது.

துறைமுக அலையினால் பாதிக்கப்பட்டு கல்வியை இழந்து வேறு நிறுவனங்களின் உதவியைப் பெற்ற மாணவர்கள் தமிழ்மாணவர் ஒன்றியச் செயலகத்தோடு, தொடர்பு கொள்ளுமாறு வேண்டப் பட்டுள்ளனர். (33)

# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு பின்லாந்து அரசு உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை மற்றும் அதிதீவிரசிகிச்சை, சத்திரசிகிச்சைப் பிரிவுகளின் தொழிற்பாட்டினை விரைவுபடுத்துவதற்கு ஏற்ற நவீன வைத்திய உபகரணங்களை பின்லாந்து அரசு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் யாழ். போதனா வைத்திய சேவையின் தொழிற்பாடு வேகமாகவும், நுட்பமானதாகவும், நவீனத்துவமானதாகவும் இருக்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டே இவற்றை பின்லாந்து அன்பளிப்புச் செய்துள்ளது. (33)

# பாடசாலைகளில் தங்கியுள்ளோரை மீள் குடியமர்த்த துரித நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களைத் தாக்கிய சுனாமியால் இடம் பெயர்ந்த மக்கள் தங்கியிருந்ததனால் இதுவரையில் இயங்காதிருக்கும் பாடசாலைகளை மீள இயங்கச் செய்வதற்கான துரிதநடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப் பட்டுவருகிறது.

அந்த வகையில் பாடசாலைகளில் தங்கியிருக்கும் இடம் பெயர்ந்த மக்களை அவர்களது வீடுகளில் மீளக்குடியமர்த்துதல் மற்றும் தற்காலிக இடைத்தங்கல் முகாம்களில் குடியமர்த்துதல், பாடசாலைகள் அல்லாத பொது இடங்களில் தற்காலிகமாகத் தங்க வைத்தல் போன்ற நடவடிக்கைகள் தற்பொழுது துரிதமாக மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இதேவேளை சுனாமியால் இடம் பெயர்ந்த மக்கள் தங்கியிருப்பதன் காரணமாக யாழ்.குடாநாட்டிலுள்ள 18 பாடசாலைகளில் இன்னமும் முதலாம் தவணைக் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் படாமையும் குறிப்பிடத்தக்கது. இதனால் கல்விச்சமூகத்தினருக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் கவனத்தில் கொண்டே மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. (33)

# தொடர்ச்சியாக நள்ளிரவில் வீட்டின் மீது கல்வீச்சு விசமிகளின் செயலைத் தடுக்க இளைஞர்கள் முயற்சி

## கல்வீச்சில் பெண்ணொருவர் காயம்

(பருத்தித்துறை)

நள்ளிரவு வேளை இனம் தெரியாத விசமிகளால் வீட்டின் மீது கல்வீச்சு இடம்பெற்றுள்ளது. இதன் போது இளம்குடும்பப் பெண் காயத்துக்குள்ளானார்.

அல்வாய் வடக்கு அல்வாயைச் சேர்ந்த புகனாம்பிகா என்பவரது வீட்டின் மீதே இனம் தெரியாத விசமிகள் நான்கு நாட்களாக கல் வீசி வீட்டினை சேதப்படுத்தி இருந்தனர்.

அதேபோன்று கடந்த ஞாயிறன்று மிகவும் சரமாரியாக வீட்டின் மீதுகல்வீசப்பட்டு வீட்டின் ஓடுகள் உடைந்து விழுந்தமையால் அலறியடித்துக் கொண்டு ஏணையில் தூங்கிக் கொண்டிருந்த மூன்று மாதக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு அச்சம் காரணமாக வெளியேற முற்பட்டவேளை புகனாம்பிகாவின் மகள் கௌதமி கல்வீச்சுக்கிலக்காகி நெற்றியில் காயமுற்றுள்ளார். மேற்படி புகனாம பிகா லண்டனில் வாழ்கின்ற தனது பிள்ளைகளிடம் சென்று மீண்டும் கடந்த வாரமே ஊர் திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ் விசமிகளின் செயலால் அக்கிராம வாசிகள் அச்சத்தில் மூழ்கியுள்ளனர். ஆனால் அக்கிராம இளைஞர்கள் இரவு நேரகாவலில் ஈடுபடுவதற்குத் திட்டமிட்டுள்ளனர். (45)

# தியாகி அறக்கொடை நிறுவனத்தின் புதிய கட்டடத்தொகுதி திறப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள தியாகி அறக்கொடை நிறுவனத்தின் புதிய கட்டடத் தொகுதியை நேற்று முன்தினம் காலை பதினொரு மணியளவில் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சந்திரசேக ரன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இந்த நிறுவனமானது தியாகி என்று மக்களால் அழைக்கப்படும் புலம்பெயர்ந்து சுவிஸ்நாட்டில் வசிக்கும் சமூகப் பற்றுள்ள ஒருவரால் அவருடைய சொந்த வளங்களில் இருந்து இந்த நிறுவனம் இயங்கி வருவதாக தெரியவருகிறது. சமூகத்தில் நலிவுற்றிருக்கும் மக்களுக்கு உதவி வரும் இந்த நிறுவனத்தில் பெண்களுக்கான தையல் பயிற்சி வகுப்புக்களும், பெணகளைக் கொண்டு இயங்கும் ஆடைத் தொழிலகமும், மாணவர்களுக்கான உதவித்தொகைகளும், விதவைகளுக்கான சுய தொழில் முயற்சிகளுக்கான உதவிகளும் நலிவுற்ற குடும்பங்களுக்கான பொருளாதார உதவிகளும் சுயதொழில் முயற்சி களுக்கான உதவிகளும் வழங்கப்பட்டு வருவதாக தெரியவருகிறது. இந்த நிகழ்விற்கு கல்விப் பணிப்பாளர் (யாழ் மாவட்டம்) விக்னேஸ்வரன், பொருண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ்.மாவட்ட பொறுபபாளர் தேவா, அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் பரமநாதன், சக்திவேல் மற்றும் மல்லாக மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் மற்றும் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டனர். (28)

# உந்துருளியில் வந்த மாணவன் நாயுடன் மோதிப் படுகாயம்

(மல்லாவி)

பாண்டியன் குளம் பிரதேசத்தில் உந்துருளியில் வந்த மாணவன் நாயுடன் மோதி படுகாயமடைந்துள்ளார். சம்பவம் நேற்றுக் காலை 8.30 மணியளவில் இடம்பெற்றது.

இளமருதங்குளம் பகுதியில் இருந்து கற்றலுக்காக பாண்டியன் குளப் பிரதேசத்திற்கு வந்தபோதே செல்வபுரம் பாலத்திற்கு முன்பாக நாய் ஒன்று குறுக்கிட்டதால் உந்துருளியில் பயணம் செய்தவர் பாலத்திற்கு அருகில் வீழ்ந்து தலையில் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக மல்லாவி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார். பரமானந்தம் சந்திரசேகரம் (வயது-19) இள மருதங் குளத்தை சேர்ந்தவரே விபத்தில் படுகாயமடைந்தார். (24)

# நீர்வளத்தை தனியாருக்கு விற்பனை செய்யும் அரசின் தீர்மானத்திற்கு ஜே.வி.பி எதிர்ப்பு

நீர்வளத்தை தனியாருக்கு விற்பனை செய்யும் அரசாங்கத் தின் எந்தவொரு தீர்மானத்தையும் ஜே.பி.வி. எதிர்க்கும் என அறி வித்துள்ளது.

நாட்டின் தேசிய நீர்வளத்தை விற்பனை செய்யும் அரசாங்கத்தின் தீர்மானம் குறித்து தமக்கு அறிவிக்கப்படவில்லை என்றும் அவ் வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் ஜே.பி.வி.யின் பாராளு மன்ற உறுப்பினர்கள் அனைவரும் அதற்கெதிராக நடவடிக்கை மேற்கொள்வார்கள் என்று ஜே.வி.பி.யின் ஊடக அறிக்கை ஒன்றில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# 'கல்லூரித் தாயில் முகிழ்ந்த இதழ்கள்' நாளை இறுவெட்டு வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியில் சித்திரத்துறை நான்காம் அணி உள்ளகப்பயிற்சி மாணவன் இறக்காமம் ஜனாப் எஸ்.எல்.எம்.குத்தூஸின் " கல்லூரித்தாயில் முகிழ்ந்த இதழ்கள்" இறுவட்டு வெளியீட்டு விழா கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நாளை பிற்பகல் 3.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையினைப் பல்கலைக்கழக பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதனும், அறிமுகவுரையினை நுண்கலை மன்றம் க.ரட்ணேஸ்வரனும் ஆற்றவுள்ளார்கள். வெளியீட்டுரையினை யாழ்பல் கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜாவும் ஆக்கியோன் அகத்திலிருந்து ஜனாப், எஸ்.எல்.எம் குத்துஸும் ஆற்றவுள்ளனர். இந்நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கப் படுகின்றனர்.

## நெருக்கடியை அகற்ற வேண்டுகை

(பூநகரி)

பூநகரி-பரந்தன் வீதியில் தம்பிராய் சந்திக்கும், வாடியடிக்கும் இடையேயான வீதியில் கிரவல் பறித்து பரவாமல் குவியலாக இருப்பதால் போக்குவரத்தில் பல சிரமங்கள் ஏற்படுகின்றது. (34)

# அரசியலமைப்பில் மாற்றம் ஏற்படுத்துவதன் மூலமே சனாதிபதித் தேர்தலை ஒத்தி வைக்க முடியும்

## பவ்ரல் அமைப்பின் தலைவர் கருத்து

(கொழும்பு)

அரசியல் அமைப்பில் மாற்றங் கொண்டு வருவதன் மூலம் மட்டுமே சனாதிபதித் தேர்தலை ஒத்திப் போட முடியும் என பவ்ரல் அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார். அண்மையில் சனாதிபதி சந்திரிகா இன்னும் 5 வருடங்களுக்கு எவ்வித தேர்தலும் சிறிலங் காவில் நடைபெறாது என்று கூறியிருப்பதையடுத்து மேற்படி அமைப்பு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

டெய்லிமிரருக்கு அவர் அளித்த பேட்டியில் மேலும் கூறியதாவது;

சிறிலங்காவின் அரசியலமைப்பின் படி நிறைவேற்றதிகார சனாதிபதி ஒருவர் 12 வருட கால அல்லது 6 வருட கால இரு தவணைகள் பதவியில் இருக்க முடியும் என்றும் தேர்தலை ஒத்திப் போடுவதாயின் பாராளுமன்ற வாக்கெடுப்பு ஒன்றில் அவர் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவைப் பெறவேண்டும் அல்லது உயர் நீதிமன்ற அனுமதியைப் பெறவேண்டும் என்றும் தெரிவித்தார்.

உண்மையில் 2006 ஆம் ஆண்டு ஏப்பிரலில் உள்ளூராட்சி சபைத் தேர்தலும் 2010ஆம் ஆண்டில் பொதுத்தேர்தலும் நடைபெற வேண்டும். இந்த நிலையில் சந்திரிகா பொறுப்பற்ற அறிவித்தல் ஒன்றை விடுத்திருப்பதாகவும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐ.தே கட்சி மக்களைத் திரட்டி போராட்டம் நடத்தலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

# தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம்

(திருமலை)


திருகோணமலை மாவட்டத்தில் கடந்த 4 தினங்களாக பெய்த பெருமழையின் காரணமாக தாழ்ந்த இடங்களில் மீண்டும் வெள் ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

மூதூர் கிழக்கு பிரதேசத்தில் நவரெத்தினபுரம்,கூனித்தீவு, சம்பூர் ஒரு பகுதி, கடற்கரைச் சேனை ஆகிய இடங்கள் வெகுவாகப் பாதிக் கப்பட்டுள்ளன.

மக்கள் பாதுகாப்பிற்காக மேட்டு நிலங்களுக்கு இடம் பெயர்ந் துள்ளனர். கூனித்தீவு நாவலர் வித்தியாலயத்தில் தங்கியிருக்கும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக திருகோணமலை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் ஒரு தொகுதி நிவாரணப் பொருட்களை ஞாயிற்றுக்கிழமை அனுப்பி வைத்தனர்.

## கண்டெடுப்பு

புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு என்னும் முகவரி இடப்பட்டுள்ள செல்வரா-ஹரீந்திரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை முல்லைத்தீவு கச்சேரியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதற்குரியவர் அலுவலக நேரத்தில் கச்சேரியில் பெற்றுக்கொள்ளலாம் (20)



புத்திஜீவிகளுடனான சந்திப்பில்...



மந்திராலோசனை.



நோர்வே உயர்மட்டக் குழுவினருடன்...

## 17-01-2005-23-01-2005




**17**

☐ தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களை பல்வேறு நாடுகளிலிருந்து வந்திருந்த புத்திஜீவிகள் சந்தித்தனர். இதன்போது துரிதகதியில் இயல்பு வாழ்வுக்குத் திரும்பும் வகையில் மக்கள் துயர் துடைப்பதும் அதிர்ச்சியிலிருந்து மீட்டெடுப்பதுமே எம்முன்னுள்ள முக்கிய சவால் எனத் தெரிவித்தார்.

☐ கனேடியப் பிரதமர் போல் மார்ட்டின் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் சந்திப்பு. அத்துடன் கல்முனைப் பிரதேசத்திற்கு விஜயம் செய்து ஆழிப் பேரலையால் ஏற்பட்ட பாதிப்புக்களைப் பார்வையிட்டார்.

☐ பொங்குதமிழின் 4ஆம் ஆண்டு நிறைவுதின நிகழ்வுகள் யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெற்றது.




☐ கனேடியப் பிரதமர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் றெஜியையும் கொழும்பிலுள்ள ஹில்டன் ஹோட்டலில் சந்தித்தார்.



**18**

☐ அரசியல்துறைப் பொறுப்பாளர் தலைமையிலான குழுவினரை நெதர்லாந்துத் தூதுவர் சுசானா பிறங்கற்



மற்றும் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் வூட்டர் வில்ரன் ஆகியோர் சந்திப்பு.

☐ மிருசுவிலில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் பலி.

☐ நெதர்லாந்துத் தூதுவர்களும், ஐரோப்பிய யூனியனின் பிரதிநிதிகளும் முல்லை நகரைச் சென்று பார்வையிட்டதுடன் தமிழீழ திட்டமிடல் செயலகப் பணிப் பாளர் தூயவனை முல்லை செயலணிக்குழு செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.



**19**

☐ ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி கிமால் மோர் ஜானி அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், சுனாமியால் இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வாறு உதவ முடியுமோ அதனைச் செய்வதில் நாங்கள் அக்கறையாகவுள்ளோம் எனத் தெரிவிப்பு.



☐ சுனாமி அனர்த்த நிதிக்கென புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த திரு நாவுக்கரசு என்பவர் மூன்று இலட்சம் ரூபா பணத்தினை அரசியல்துறைப் பொறுப்பாளரிடம் கையளித்தார்.

☐ சிலிங்கோ நிறுவனத்தினரால் நிறுவனத் தலைவர் லலித் கொத்தலாவலையினால் வடபகுதியில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய நிவாரணப் பொருட்களை, விடுதலைப்புலிகளினால் விடுதலை செய்யப்பட்ட சாகர வர்த்தனா கப்பலின் கப்டன் போயா கொட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங் கனிடம் கையளித்தார். இவருடன் காணா மற்போன படை வீரர்கள் சங்கத் தலைவர் ஈ.எம். நாணயக்காரவும் கலந்து கொண்டார்.



☐ அம்பாந்தோட்டையில் நடைபெற்ற புனரமைப்பு பணிகளில் கலந்துகொண்டு உரையாற்றிய சனாதிபதி அடுத்த ஐந்து வருட காலத்திற்கு தேர்தல் எதுவும் நடைபெறாதெனத் தெரிவிப்பு.

☐ போலந்துப் பிரதமர் மெரிக் மல்கா இலங்கைக்கு விஜயம் செய்து சனாதிபதி சந்திரிகாவைச் சந்திப்பு.

☐ மிருசுவிலில் இராணுவ வாகனம் மோதி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்த சம்பவத்தைக் கண்டித்து மக்கள் கொடிகாமத்தில் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**20**

☐ நோர்வே உயர்மட்டக் குழுவினர் இலங்கைக்கு விஜயம்.

☐ ஆறு புதிய நீதியரசர்கள் சனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

☐ வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பணிமனையில் இடம்பெற்ற சந்திப்பில் ஆழிப்பேரலையின் தாக்கத்தால் யாழ். மாவட்டத்தின் மீன்பிடித்துறை முற்றாக அழிந்துள்ள நிலையில், அதனைச் சரியான முறையில் எல்லோரும் இணைந்து கட்டியெழுப்ப வேண்டுமென தமிழீழ கடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவிப்பு.

**21**

☐ தாயகம் திரும்பிய அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்களும், தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களும் பல்வேறு விடயங்கள் குறித்து மந்திராலோசனை நடத்தினர்.

☐ சுனாமி அனர்த்தத்திற்கு மிகப் பெரிய சர்வதேச உதவிகள் கிடைத்துள்ளன. பொதுவான கட்ட மைப்பு ஊடாக இவ் உதவிகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென நோர்வே பிரதிநிதி களுடன் நாம் கலந்துபேச வேண்டியுள்ள தென லண்டனிலிருந்து கிளிநொச்சியை வந்தடைந்த விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் செய்தியாளர்களிடம் தெரிவிப்பு.



☐ அரசியல்துறைப் பொறுப்பாளர் தலைமையிலான குழுவினரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்தனர்.



☐ நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் உள்ளிட்ட குழுவினர் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்துப் பேசினர்.

☐ மட்டக்களப்பு, பொலநறுவை எல்லையில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் பலி.

☐ நிட்டம்புவ தங்கொல பிரதேசத்தில் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த மூவர் சுட்டுக்கொலை.

**22**

☐ தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களை நோர்வேயின் உயர் மட்டக் குழுவினர் சந்தித்தனர். இதன்போது சுனாமியால் பாதிக்கப்பட்ட எவ்வின மக்களாக இருந்தாலும் சரி இதற்கென உலகம் முழுவதிலும் இருந்து வருகின்ற உதவிகள் அவர்களுக்குக் கிடைக்கக் கூடியதாக ஒழுங்கு செய்ய வேண்டுமென வலியுறுத்தப்பட்டதென அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குத் தெரிவிப்பு.

☐ ஆழிப் பேரலையால் முற்றாகச் சிதைவடைந்த முல்லை நகரைப் பார்வையிடச் சென்ற நோர்வே உயர்மட்டக் குழுவினர் நகர்ப் பகுதியில் தமிழீழக் கடற்படைச் சிறப்புத் தளபதி கேணல் சூசையை சந்தித்தனர். பின்னர் முல்லைத்தீவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்திவரும் செயலணிக்குழு அலுவலகத்திற்குச் சென்று அதன் செயற்பாடுகளைப் பற்றிக் கேட்டறிந்தனர்.



☐ "மீளவும் கடலை நோக்கி" சுனாமியின் பின்னரான துரித புனர்வாழ்வு அபிவிருத்தி சேவை நிகழ்ச்சித் திட்டத்தினை நோர்வே உயர் மட்டக் குழுவினர் கிளி.இல் அமைந்துள்ள புனர்வாழ்வுக்கழக தலைமைச் செயலகத்திற்கு விஜயம் செய்த வேளை ஆரம்பித்து வைத்தனர்.



**23**

☐ நோர்வே உயர் மட்டக் குழுவினர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்தனர்.



☐ தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களை கொழும்பிலுள்ள நோர்வே தூதரகத்தில் நோர்வே நாட்டு பாராளுமன்ற உறுப் பினர்கள் சந்திப்பு. இதன்போது சிறி லங்கா அரசாங்கம் அனர்த்தப் பணி என்ற பெயரில் மீண்டும் இராணுவ ஆக்கிரமிப்புக்கு தயாராகின்றதென வலியுறுத்தப்பட்டது.


# வானளாவ எழும்பிய அலை மலை வீழ்ந்தது போல் என்மேல் அடித்தது

## ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

**கடல் பெருக்கெடுத்து வந்தபோது முல்லைத்தீவு வட்டுவாகல் தொடுவாயில் பாலத்துக்குப் பக்கத்தில் நின்று மீன் பிடித்த வேளை அலையுடன் அடி பட்டுப்போய் ஒருவாறு தப்பி வந்த 48 வயதுடைய வட்டுவாகலைச் சேர்ந்த சதாசிவம் விவேகானந்தம் என்பவர் தனது அனுபவத்தை விபரிக்கிறார்.**


பகுதி 08

அ.லோகீசன்



முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தில் நந்திக்கடல் பக்கமாக நான் வலை வீசிக்கொண்டிருந்தேன். அந்த நேரத்தை என்னால சரியாய் சொல்லத் தெரியவில்லை. குத்துமதிப்புக்குஒரு 8.30 தான வரும். முதல்ல பெரிசா மீன் படேல்லை. பிறகு சும்மா கொஞ்சம் பட்டுது. கடல் பக்கம் ஏதோ ஒரு இரைச்சல் பெரிசாய் கேட்டது. கிபிர் அடிச்சு குண்டு இரைந்தமாதிரித் தான் அந்தச் சத்தம் கேட்டது. இப்படிச் சில நேரத்தில் இரையிறது தானே எண்டு நினைச்சுக்கொண்டு நான் அதைப் பொருட்படுத்தவில்லை. அடுத்த பாடு வலையை வீசினன். வீசிமுடியேல்ல அந்தச் சத்தம் எனக்குக் கிட்டவாகக் கேட்டது. நான் காத்து ஏதோ அடிக்குதாக்கும் எண்டு நினைத்தேன். அதுக்கிடையில் வலைவீசின களைப்பில் மரத்துக்குக் கீழ் இருந்து சாப்பிட்டுக்கொண்டிருந்த எங்கட பெடியள் "அங்க பாரடா கடலை" எண்டு சொன்னாங்கள். அவங்கள் நெடுகப் புழுகிறவங்கள். அதால நான் அதையும் காதில விழுத்தவில்லை.

அப்படியே திரும்பி உயரக் கல்லில ஏறி ஏறிய வெளிக்கிட இரண்டு பக்கக் கரையும் தெரியாமல் கடல் மேலால நுரைச்சுக்கொண்டு வந்தது. கடலைப் பார்த்தவுடனேயே நான் திகைத்துப்போனேன். இந்தக் கடலுக்கால எப்படித் தப்புறது. முடிவே எடுக்கத் தெரியவில்லை. உடனே அத்தான் கட்டின வலையையும், என்ர வலையையும் எடுத்துக்கொண்டு அந்தப் பாசியடிச்ச உடைஞ்ச கல்லுக்குள்ளால பாஞ்சு அடிச்சு ஓடினன். ஓடிப்போய் பாலத்தில் ஏறிவிட்டேன். ஏறிய கையோடு கரையை நோக்கி ஓடிப்போனேன். நான் கரையை அடைவதற்கிடையில் கடல் கிட்ட வந்துவிட்டது. என்னாலையும் ஓடஏலாமல் போச்சுது. பெரியாத்துப்பாலத்தில கடல் வந்து அடிச்சு வானத்தப் பொறுக்க அலை எழும்பியது. அதைப்பார்த்த பயத்தில பாலத்துக்குக் கரையில் கட்டியிருந்த கட்டையை இறுக்கிக் கட்டிப்பிடிச்சுக்கொண்டு இருந்து "முருகா பிள்ளையாரே எண்டு மண்டாடினன்". பயத்தில திரும்பிப் பார்த்தேன். எழும்பின அலை அவ்வளவும் சேர்ந்து எனது பின்பக்கத்தில் வந்து அடிச்சது. இருநூறு முன்னூறு வாகனம் சேர்ந்து வந்து அடிச்ச மாதிரி இருந்தது. அதோட என்னைத் தூக்கி பாலத்துக்குள் எறிந்துவிட்டது. உடம்பை நிமிர்த்த முடியவில்லை. சாதுவான மயக்கம் வாறது மாதிரி இருந்தது.



நான் நினைவு இழந்து போனேன். தண்ணி என்னை அடித்துக்கொண்டு போனது. கொஞ்ச நேரத்தில் நான் தண்ணியுடன் அடிபட்டுப்போறன் எண்டு உணர முடிந்தது. தண்ணி என்னை மேல்நோக்கிக் கொண்டு வரவில்லை. கீழ் நோக்கிக் கொண்டு போனது. எத்தனை தரம் அலையில் அடிபட்டு நீந்தி இருப்பம். ஆனால் இப்ப அலை என்னை சேத்துக்குள் கொண்டு போய்ச் செருகியது. இந்தத் தேசம் எல்லாம் கொண்டு போய் உலைச்சுப்போட்டு. ஒரு மரத்தோட கொண்டு போய் அடிச்சது. அந்த அடியோடு எனக்கு எதுவுமே செய்ய ஏலாமல் இருந்தது. ஆத்துக்குள் இருந்து கரை. தண்ணி அடிச்சுக்கொண்டு போனது. நான் கையில் தட்டுப்பட்ட எல்லாத்தையும் பிடிச்சுப்பார்த்தேன். எதை எதை எல்லாம் பிடித்தேனோ எல்லாம் என் கையோடு உருவிக்கொண்டு வந்தது. சில பற்றைகள் வேருடன் கூட பிடுங்குப் பட்டு வந்திருக்க வேணும். அந்தளவுக்கு கடலின் வேகம் இருந்தது.

இப்படியே எங்கபோறன் எண்டு தெரியாமலே போய்க்கொண்டிருந்தன்.



இப்படியே போய் ஒரு குடாவில் திரும்பியது. திருப்பேக்குள்ளதான் ஒரு மரத்தில பிடிக்கக் கூடிய மாதிரி இருந்தது.

முதலில் மரத்தை கையால் பிடிச்சன் ஆனாலும் அலையின் வேகம் என்னை இழுத்தது. அதால என்ர காலையும் போட்டுக் கோர்த்துக் கட்டி கொண்டு "முருகா பிள்ளையாரே என்னைக் காப்பாற்று எண்டு ஆயிரம் தரம் சொல்லி இருப்பன். கடலில் இருந்து வந்த தண்ணி இப்ப திருப்ப கடலுக்குள் போனது. அந்த இடைவெளிக்குள்ள நான் மரத்துக்கு மேல ஏறி விட்டேன் இப்பதான் எனக்கு உயிர் வந்தது. மரத்தில் ஏறி நிண்டு பார்த்தேன் அம்பது நூறு பனை தண்ணிக்குள்ளால் மிதந்து வந்தது. முதல் பாலத்துக்கு இஞ்சால வந்த பனை இப்ப மற்றப் பனையளையும் சேர்த்து கொழுவிக் கொண்டு பெருங் கடலுக்குப் போனது. அதைப் பார்த்ததும் நான் நின்ற மரத்தையும் இப்படித்தான் இழுத்துக் கொண்டு போகப் போகிறது என்று நினைத்தேன். எனது "றெயின் கோட்டை கழட்டி மரத்தில் கட்டினேன். அப்போது தான் பார்த்தேன் மரத்தில் இன்னும் ஒரு பெடியனும் நின்றான். அவனைக் கண்டதும் எனக்கு ஓரளவு ஆறுதலாக இருந்தது. அதுக்குப் பிறகுதான் பார்த்தேன் எனது இடுப்பில் இருந்த உடுப்பைக் காணவில்லை.

தண்ணி கொஞ்சம் குறைந்திருந்தது. இதைப் பயன்படுத்தி இறங்கி நீந்திக் கரைக்குப் போகலாம் போல் இருந்தது. ஆனால் மரத்தில் நின்ற மற்றப் பெடியன் "வேண்டாம் உதுக்குள்ள நீந்தி தப்ப ஏலாது சாகாமல் பேசாமல் மரத்தை வடிவாய் பிடிச்சுக் கொண்டிரு" என்று சொல்லி மறித்தான். கொஞ்சநேரம் மரத்தில் இருந்து பார்த்தேன் கடல் வற்றிக் கொண்டு போனது. இதில் இருந்து தப்புவதற்கு இதுதான் தருணம் என்னுடன் இருந்த அந்தப் பெடியனையும் இழுத்துக் கொண்டு மரத்தில் இருந்து இறங்கி தொடுவாய்க்குள்ளால் நீந்தி வந்தோம் முடியாமல் போய்விட்டது. நான் மூன்று நாலு தடவை தண்ணி குடித்து விட்டேன். மரங்களின் தலைப்பு மட்டும் தெரிந்தது வேறு எதுவுமே தெரியவில்லை.

இதுக்கிடையில் கடல் என்னை உறுட்டிக் கொண்டு போய் ஒரு கட்டத்தில கால் மேலையும் தலை கீழையுமாக கொண்டு போய் சேத்துக்குள் செருகியது. நானும் வலிச்சுப்பார்த்தேன் என்னால்மேல் நோக்கி வர முடியவில்லை. கண்எல்லாம் சேறு போய் விட்டது. அதால ஒரு கண் தெரியாமல் போய்விட்டது. அதால எதையும் வடிவாய்ப் பார்க்கமுடியாமல் இருந்தது. மூக்குக்குள்ளேயும் வாய்குள்ளேயும் சேறு போய்விட்டது. எனக்கு ஏதோ செய்தது.

ஒருமாதிரி நீந்தி வந்து முழங்கால் அளவு தண்ணீக்குள் வந்துவிட்டேன். எழும்பி றோட்டை நோக்கி நடந்து வந்தேன். எனக்குப் பின்னால் நீந்திவந்த அந்தப் பெடியன் சொன்னான் " எனக்கு ஒண்டும் இல்லை ஒரு சாரம் வேணும் எடுத்து தாங்கோ என்ர உடுப்பெல்லாத்தையும் கடல் கொண்டு போட்டுது" எண்டு சொன்னான்.

எனக்கு அறிவு மயங்குவது தெரிந்தது றோட்டில் தூரத்தில் யாரோ வந்ததும் தெரிந்தது. நான் றோட்டுக்கு போவம் எண்டு நடந்தன் என்னால் நடக்க ஏலாமல் இருந்தது. தலை வேகமாக சுத்தியது கண்கள் இருண்டது நான் செத்துப் போகப் போறன் எண்டு தான் நினைச்சு தப்புத் தண்ணீக்குள் விழுந்திருக்க வேணும் அதற்குப் பிறகு என்ன நடந்தது எண்டு எதுவுமே தெரியாது. பிறகு கொஞ்ச நேரத்தில் கண்முழிச்சுப் பார்த்தன் கோயில் புட்டியில் இருந்தேன். என்று தனது அனுபவத்தைப் பகிர்ந்தார்.


வீதிக்கும் தண்ணீருக்கும் இடையில் மயக்க நிலையில் கிடந்த சீர்திருத்தப் பிரிவு விசாரணைப் பொறுப்பாளரால் மீட்கப்பட்ட அந்த மனிதர்.

அடுத்த தொடரில் ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர் தனது அன்பான தங்கையை தேடிக்கண்டு பிடித்து இரண்டு நாட்களில் இழந்து போன அண்ணனின் துயர அனுபவம் பேசும். (தொடரும்....)

# நெஞ்சைவிட்டகல


பி.திகதி: 1996-03-04

அண்ணாமலை
நர்த்திகா
வவுனியா.


பி.திகதி: 2001-03-29

கமலச்செல்வன்
பிரியங்கா
புதுக்குடியிருப்பு.


பி.திகதி: 2001-04-10

தவநேசன்
ரஜிதா
தர்மபுரம்


பி.திகதி: 2002-12-04

மருதன்
ஆரபி
மல்லாவி.


பி.திகதி: 2002-02-03

விமலன்
பிரசாத்
யாழ்ப்பாணம்.


பி.திகதி: 1998-03-03

சின்னத்துரை
கஸ்தூரி
சிறுப்பிட்டி.


பி.திகதி: 2002-01-14

மனோகரன்
யாழினி
கிளிநொச்சி.

சுனாமியால்
சிறுவர் இல்ல

மழலைகள் உங்களை வளமா
அரவணைத்து காத்த அன்னை
கடல் அலையுடன் அ
மழலைகளே உங்கள் நினை

பணியாளர்


பி.திகதி: 1993-04-04

அலோசியஸ்
அருள்நேசன்
விசுவமடு.


பி.திகதி: 2001-06-14

குலவீரசிங்கம்
ஐஸ்வரியா
பருத்தித்துறை.


பி.திகதி: 1998-06-08

தியாகேஸ்வரன்
திவ்வியா
சின்னஊரணி.


பி.திகதி: 1993-10-03

பாலகிருஸ்ணம்
இராஜேஸ்வரி
தேவிபுரம்.




பி.திகதி: 1997-04-12

தியாகராஜா
தர்மிகா
கிளிநொச்சி.


பி.திகதி: 1992-10-08

சிவகுமார்
சாந்தமலர்
பெ.பு.நி.


பி.திகதி: 1996-07-13

அன்ரனி
குலதீபன்
தாளையடி.


பி.திகதி: 1996-04-15

கதிர்காமநாதன்
சசிந்தன்
யாழ்ப்பாணம்.

(5470)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



துணைவர்
மு. யோகரட்ணம்
(அலுவலக உதவியாளர்)



திருமதி. நிர்மலாதேவி
யோகரட்ணம்
(எழுதுநர்)

இளைய புத்திரன்
மருட்சாயன்

மீன்பாடும் தேன் நாடாம் மட்டு நகர் அதனில் அமைந்த ஊராம் செட்டி பாலையத்தில் மூத்த தம்பி செல்லம்மாவின் வாழ்வில் அவதரித்த இளைய புத்திரர் யோகரட்ணம் தனது மணவாழ்வினை முல்லை நகரில் உள்ள முள்ளியவளை எனும் கிராமத்தில் கனகசிங்கம் தங்கம்மாவின் மணவாழ்வில் அவதரித்த இளைய புத்திரி நிர்மலா (சித்தம்) அவர்களை மணம் முடித்து மணவாழ்வில் மலர்ந்த யதிபாரதி, மருட் சாயனனோடு இல்லறத்தை நல்லறமாக அமைத்துக்கொண்டிருக்கும் வேளைதனில் தமது அரச பணிக்காக (பிரதேச செயலாளர்பிரிவு) முல்லை நகரில் கள்ளப்பாடு எனும் கிராமத்தில் மனையமைத்து வாழ்ந்த வேளைதனில் 26.12.2004 அன்று கடலன்னை தன் கரங்களால் யதி பாரதியை தவிக்கவிட்டு விட்டு உங்கள் மூவரையும் தன் மடியில் அரவணைத்துக்கொண்டது. இத்துயரால் துயருறும் அம்மா, அண் ணன்மார், அக்காமார், மச்சாள்மார், மச்சான்மார், மருமக்கள், பெறாமக்கள், உற்றார், உறவினர்கள் உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கின்றனர்.

தகவல்-
மு.கோபாலரெத்தினம்
பிரதேசசெயலாளர் பிரிவு
நாவிதன்வெளி
கல்முனை.

(5666)

# நெஞ்சில் நீங்காத நினைவலைகள்

கடந்த 26.12.2004 அன்று இயற்கை அன்னையின் சீற்றத்துக்கு இரையான எமது பணியாளர்களான

பிறப்பு
1975 - 07 - 17



திருமதி. பாலகிருஸ்ணன்
**விஜயகுமாரி**
(கள்ளப்பாடு - முல்லை
நிர்வாக அலுவலர் முல்லை மக்கள் நலன்புரிச்சங்கம்)
(13 வருடங்கள்)

பிறப்பு
1980 - 05 - 14



செல்வி.
**சோதிசுபாஜினி**
(வண்ணாங்குளம் - முல்லை)
வண்ணாங்குளம் முன்பள்ளி ஆசிரியை
(4 வருடங்கள்)

பிறப்பு
1984 - 05 - 10



செல்வி. ஜேசுராசா
**ஜெயவதனா**
(வண்ணாங்குளம் - முல்லை)
வட்டுவாகல் முன்பள்ளி ஆசிரியை
(4 வருடங்கள்)

நேற்றுவரை எம்மோடு உடனிருந்தவரே
இன்று மட்டும் எமைவிட்டு எங்கு சென்றீர்
மக்களுக்காய் தினந்தோறும் பணி செய்தீர்
மறக்கிலோம் உம்பணியை எந்நாளும்
ஆர்ப்பரிக்கும் கடலன்னையே – உன் சீற்றம்
எம்மவரை இரை கொண்டதுடன் அடங்கிற்றுதா
உறவுகளை இழந்து தவிக்கும் உற்றாரே
உம்துயரில் நாமும் இணைகின்றோம்.

*கடந்த 26. 12. 2004 அன்று முல்லைத்தீவில் ஏற்பட்ட கடலன்னையின் சீற்றத்துக்கு இரையாகிச் சாவடைந்த எமது பணியாளர்கள்,முல்லை வாழ் மக்கள் அனைவருக்கும் எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன், உறவுகளை இழந்து தவிக்கும் எம்மவர் அனைவருக்கும் எமது அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பிரிவால் துயருறும்
பணிப்பாளர், இணைப்பாளர்கள்,பணியாளர்கள் தமிழர் புனர்வாழ்வுக்கழகம்,
முல்லை மக்கள் நலன்புரிச் சங்கம், முல்லைத்தீவு.

(5663)

## சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்த எம் உறவுகளுக்கான கண்ணீர் அஞ்சலியும், இரங்கலும்

* இணைய அங்கத்துவ நிறுவனங்களின் ஊழியர்,உறவினர் மற்றும் முன்பள்ளிச் சிறார்கள்.
* முல்லை செந்தளிர் இல்லச் சிறார்கள்.
* பேரலை பலிகொண்ட பொது மக்கள்

அடுத்து நடப்பது என்ன என்று தெரியாத நிலையில் அனைவருக்கும் எம் கண்ணீர் அஞ்சலியையும், இரங்கலையும் சமர்ப்பிக்கின்றோம்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்,
முல்லை மாவட்டம்,
புதுக்குடியிருப்பு.

(5662)

## துயர் பகிரவும் 31 ஆம் நாள் நினைவலையும்

ஆழிப் பேரலையால் தாயக மண்ணை விட்டுச்
சென்ற எம் உறவுகளே!
வடமறவர் கால்பதித்த மண்ணில்
கடல் தாயின் கோரப்பசிக்கு இரையாகிய
மாணவச் செல்வங்களே, ஆசான்களே, உறவுகளே!
அனைவருக்கும் இந்நாளில் எமது அமைப்பின்
சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தையும், துயரத்தையும்
தெரிவித்துக் கொள்கிறோம்.

வடமராட்சி கிழக்கு,
தமிழீழ மாணவர் அமைப்பு.

(5609)

## ஜெயலலிதா வீட்டில் கொள்ளை

(மாமல்லபுரம்)

அறுபத்தாறு கோடி ரூபா சொத்துக்குவிப்பு வழக்கில் இடம் பெற்ற ஜெயலலிதாவின் பையனூர் பண்ணை வீட்டில் கதவை உடைத்து விலை உயர்ந்த பொருட்களை கொள்ளையர்கள் திருடிச் சென்றுள்ளனர்.

ஜெயலலிதா மீதான 66 கோடி ரூபா சொத்துக்குவிப்பு வழக்கிலும் இந்த பங்களா இடம்பெற்றுள்ளது. இதன் காரணமாக பங்களா கேட்பார் அற்றுக் கிடந்தது. பெயருக்கு ஒரு காவலாளி மட்டும் நியமிக்கப்பட்டிருந்தார். அவருக்கு ஒழுங்காக சம்பளம் தரப்படாததால் ஏனோ தானோ என இருந்ததாகக் கூறப்படுகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட சிலர் பங்களா கதவுப் பூட்டை உடைத்து அங்கிருந்த குளிர் சாதனப் பெட்டி, தொலைக்காட்சி, குளிரூட்டி, உட்பட விலையுயர்ந்த பொருட்களை கொள்ளைய டித்துச சென்றுள்ளனர்.

## முன்னாள் அமைச்சர் சுட்டுக்கொலை

(புதுடில்லி)

ஆந்திராவில் தெலுங்குதேசம் கட்சி அலுவலகத்தில் அந்தக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் அனந்தபூர் நகரில் கட்சியின் மாவட்ட பொதுக்குழுக் கூட்டம் நடந்தது. அதில் கலந்து கொண்ட ரவி கூட்டம் முடிவடைந்தும் மதிய உணவுக்காக வீடு செல்வதற்கு தனது காரை நோக்கி நடந்துசென்ற சமயமே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சுட்டவர்கள் தப்பிச் சென்று விட்டனர்.

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி

மதியுயர்ந்து நெடுங்காலம் வட்டுவாகலிலும்
வண்ணாங்குளத்திலும் வாழ்வீர்கள் என்றிருக்க
விதி வரைந்த பாதையிலே வதனா,சுபா
உம் உயிர் துறந்து போனதேன்

முல்லையில் இருந்து எம் இளம் பிஞ்சுகளுக்கு
அன்பு,பாசம்,அறிவு ஊட்டிய எம்இனிய
ஆசிரியர்கள் ஜெயவதனா,சுபாஜினி அவர்களின்
அன்பில்,கருணையில் உறவாடிய மழலை
மொழிகளின் காற்றோடு வந்த செய்தி
அலையோடு சென்றதோடு துடித்தழுதோம்.
வேதனையால் வாடுகிறோம்– நேற்றுவரை
ஆசிரியர்களாய் இருந்தீர்கள் இன்றில்லை
என்றவுடன் நேசங்கொண்ட நெஞ்சங்கள்
பாசப்பிணைப்பினைத் தேடுகின்றோம்.
பதறிவாடுகின்றோம். உம் வெற்றிடத்தை நிரப்ப
எனி எம்மால் முடியுமா எனக் கலங்குகின்றோம்.

முல்லை பிரதேசத்தில் துளிர்விட்டு விழுது எழுப்பிய ஆலமரங்களாகிய எம் மழலைச் செல்வங்களின் சாவடைந்த செய்திகேட்டு துன்புறுவதோடு, அவர்களை ஈன்றெடுத்த பெற்றோர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, இவர்களை எங்கள் மனதில் என்றும் நிலைநிறுத்தி பிரிவுத் துயரில் பங்குகொள்கின்றோம்.

இணைப்பாளர்,
பணியாளர்கள்,
நிர்வாகம்,
முன்பள்ளிக்கல்வி
மேம்பாட்டு நிலையம்,
முல்லை மாவட்டம்.

(5664)

## 31 ஆம் நாள் கண்ணீர்க் காணிக்கை

வெண்மணலில்
பதியப்படும்
சுவடுகளை
அலை அள்ளிச் சென்றபோது
அழகென்று
பார்த்திருந்தோம்.

அலைநுரையின்
கோலத்தில்
அகமகிழ்ந்து
பூத்திருந்தோம்

விழிகள் சிவந்து
கரைகளை மீறி
தரைக்கு வந்த
கடல் கால்களையே
காவிச்சென்ற போது
அச்சத்தால் உள்ளமும்
வேர்த்திருந்தோம்.

கடலே உன் கரைகளில்
நண்டுவளைத் தோண்டிய
அந்தப் பிஞ்சுகள்
முற்கோபத்தால்– நீ
முகஞ்சிவந்த போது
மூச்சிழந்தும் பேச்சிழந்தும்
போனதேன்.?

இழப்பதற்கு
உயிரையும் மானத்தையும் விட
எதுவுமேயில்லாத– அந்த
கடலோடிகள்–உன்னை
நம்பியல்லவா
தங்கள் வாழ்வைத்
தொடங்கினார்கள்.

வாழவைப்பாய் என
நம்பியிருந்தோரின்
வாழ்வை– நீ
கருவறுத்ததேன்?
கரையிலிருந்து
கடலைப்பார்த்து– அன்று
கவிதை எழுதினோம்.
கடலில் நின்று
கரையைப் பார்க்க – இன்று
இதயம் வெடிக்குதே.

கடலலையே
கடலலையே
கண்ணீரில் ஏன்
கலந்தாய்?

கடலே, தாயே– எங்கள்
வளமே – மீண்டும்
வாழ்வளித்தா–அந்த
வரமொன்றுக்காய் தவமிருக்கிறோம்.

2004.12.26 ஆம் நாளன்று கடற்கோள் ஊறின் போது எமைப்பிரிந்த எமது நிறுவனப் பணியாளர்களின் உறவுகளையும்,தேசத்து உறவுகளையும் இந்நாளில் நெஞ்சில் நிறுத்தி, எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

பணிப்பாளர்,
பேராளர், பணியாளர்,
வருவாய்ப்பகுதி,
நிதித்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

(5611)

## 26.12.2004 இல் கடற்கோள் காவு கொண்ட பாச உறவொன்றின் நினைவில்



**தர்மினி**
கள்ளப்பாடு முல்லைத்தீவு

(கணக்காய்வு பயிற்சிக் கல்லூரி மாணவி)

கல்விச்சாலையில் கண்ணியம் பேணி
காலத்தின் தேவையறிந்து கற்றலிலோங்கி
கணக்காய்வுப் பணி செய்யக் காத்திருந்த வேளை
கடற்கோள் உன்னைக் காவு கொண்டதோ!
நீ வளர்த்த பாசமும் எம் நெஞ்சில் புதைந்திட்ட
நினைவுகளும் காலம் உள்ளவரை எம்மோடு
வாழும்...

எமது வாணிபத்தில் கணக்காய்வு பயிற்சியில் ஈடுபட்டிருந்த இம் மாணவியையும், இவ் அனர்த்தத்தில் பலியான அனைத்து உறவுகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

பணிப்பாளர்,
பொறுப்பாளர்கள்,
பணியாளர்கள்,
நகை வாணிபம்,
நிதித்துறை.

(5608)

# ாத நினைவலைகள்




பி.திகதி:
2000-04-25

பாலன்
தமிழ்வாணன்
புதுக்குடியிருப்பு.



பி.திகதி:
1999-02-20

இராஜரட்ணம்
கேசவன்
அக்கராயன்.



பி.திகதி:
1999-10-30

சூசைநாதன்
மதுசன்
முல்லைத்தீவு.




பி.திகதி:
1999-07-28

சத்தியரூபன்
யதுநந்தன்
பல்லவராயன்கட்டு.

## மறைந்த செந்தளிர்
## ழலைகள் நினைவாக

வாழவைக்க வேண்டும் என்று அன்புடன்
அவள் செந்தளிரை சுழற்றியடித்த சுனாமி
ாக அடித்துச் சென்று விட்டாலும்
ள் செந்தளிரில் என்றும் நிலைத்திருக்கும்

செந்தளிர் இல்லச்சிறுவர்கள்,
ள், பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தினர்.



பி.திகதி:
1999-10-12

தவராசா
கஜன்
கிளிநொச்சி.



பி.திகதி:
1999-05-05

இராசரத்தினம்
பிரதீபன்
உடையார்கட்டு.



பி.திகதி:
2002-07-31

மயூரன்
அபிராமி
மல்லாவி.



பி.திகதி:
1999-06-21

லோகநாதன்
அருந்தா
வட்டக்கச்சி.



பி.திகதி:
1996-04-12

தனபாலசிங்கம்
தனஞ்சயன்
முழங்காவில்.



பி.திகதி:
1992-06-21

மருதன்
அனுசலாதேவி
கோணாவில்.



பி.திகதி:
1996-05-01

சிவகுமார்
ஜெயந்தினி
புதுக்குடியிருப்பு.



பி.திகதி:
1996-12-06

கணேசமூர்த்தி
சுமிதா
வள்ளிபுனம்.



பி.திகதி:
1998-04-04

இதயரூபன்
லம்ஜா
வசாவிளான்.




பி.திகதி:
2000-01-13

ஜெயராசா
தேன்மொழியான்
புதுக்குடியிருப்பு.



பி.திகதி:
1945-04-13

வேலுப்பிள்ளை
மீனம்மா
தம்பகாமம், பளை.



பி.திகதி:
1951-11-24

நாகமணி
ராஜேஸ்வரி
8ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

# 31ம் நாள் நினைவஞ்சலி



உதயகுமார்
வசந்தரசனி
20.04.1980



ஆனந்தருபன்
நிர்மலாதேவி (தங்கா)
15.01.1974



ஆனந்தருபன்
விது
25.05.2000



குணராசலிங்கம்
யோகராணி



குணராசலிங்கம்
குமுதா



குணராசலிங்கம்
சயந்தன்




செல்வமாணிக்கம்
தங்கரத்தினம்
24.04.1939



ஜெயவீரசிங்கம்
ஜெயசாந்தினி (சாமினி)
25.09.1994



ஜெயவீரசிங்கம்
ஜெயசாலினி
29-10-1996



ஜெயவீரசிங்கம்
பேவிலக்சிகா
11.02.2004



கண்ணையா
கனகலிங்கம்
02.03.1959



ஜெயவீரசிங்கம்
ஜெயருபன்(சாந்தனி)
29.10.1992.



உதயகுமார்
விஜிக்குமார்
13.11.2001

26.12.2004 அன்று ஏற்பட்ட
இயற்கை அனர்த்தத்தின் போது
இறைவனடி சேர்ந்த எமது குடும்ப
குலவிளக்குகளுக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவித்து
அவர்களின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.



சசிகரன்
சசிகலா
சசிகரன் சஞ்சிகா

வத்திராயன் வடக்கு,
தாளையடி.

தகவல்
நமசிவாயகம் - செல்வமாணிக்கம்
குடும்பத்தினர்.

# 31 ஆம் நினைவலைகள்



தோற்றம்

1937 03 16

மறைவு

2004 12 26

## விஸ்வலிங்கம் - மேரிப்பிள்ளை

தாளையடி வீதி மயிலிட்டி காங்கேசன்துறை

யாழ்ப்பாணம்

26.12.2004அன்று ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தால் இறைபதமடைந்த எமது அன்புத்தாயார் மற்றும் அனைத்து உறவினர் களுக்கும் எமது கண்ணீர் பூக்களை காணிக்கை செய்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த் திக்கின்றோம்.

சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

அன்னாரின் பிரிவால் துயருறும் பிள்ளைகள்,
வி.பத்திநாதன்,
வி.அருட்பிரகாசம்,
வி.சந்திரகுமார்,
ப.அருந்தவமலர்.

தகவல்.
சி.பரமசிவம்,
வத்திராயன் தெற்கு,
தாளையடி.

(5467)

# நீங்கா நினைவினில்...

பிறப்பு 29 - 12 - 1962



இறப்பு 26 - 12 - 2004

## கார்த்திகேசு - விக்கினேஸ்வரன் (மாமா)

கள்ளப்பாடு - முல்லைத்தீவு

(பகுதி இணைப்பாளர் மனித வள அலுவலர்)

பொங்கும் கடலோரம் வந்துதித்த
மங்காப்புகழ் கொண்ட மாமாவே!
தங்கத்தமிழினத்தின் உயர்வுக்காய்
எங்கும் என்றென்றும் உழைத்தீரே!
பொங்கி வந்த வங்கக்கடலலையில்
சிக்கிச் சிதைந்து போனீரே!
ஏங்கித்தவித்து உம் தோழர் - நாம்
தூங்கித்துவண்டு விடமாட்டோம்.
துணிவோடு உம்பணி ஏற்று தொடர்வோம்!

கடந்த 26.12.2004 அன்றைய சுனாமி பேரலை அனர்த்தத்தின் போது மழலை தேனுஜாவுடன் சாவ டைந்துள்ளார். இந்நாளில் இவ்வனர்த்தத்தினால் சாவ டைந்த அனைத்து எம் இனிய உறவுகளையும் நினைவு கொள்வதுடன் இவரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும் பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரி வித்துக் கொள்கிறோம்.

பணிப்பாளர்,அலுவலர்கள்,
மனிதவள அலுவலர் பிரிவு,
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்.

(5581)

## புனரமைக்கப்பட்ட கட்டடத்தில் சமாசம் இயங்குகின்றது

(முல்லை)

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசம் பழைய கட்டடத்தினை புனரமைப்பு செய்து மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது என முல்லை மாவட்ட க.தொ.கூ சங்க சமாசத் தலைவர் அ.மரியராசா தெரிவித்தார்.

மக்களின் மனிதாபிமான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் முல்லைத்தீவு நகர கட்டுமானப் பணிகளை மேம்படுத்துவதற்காகவும் தமது பணியினை கடந்த 28.12.2004 அன்று ஆரம்பித்த போதும் தற்போதுதான் தமது கட்டடம் புனரமைக்க முடிந்ததென்றும் தெரியப் படுத்தியுள்ளார். (20)


# VACANCIES FOR FISHERIES SECTOR

TRO calls applications for the following vacancies.

Applications need to reach the below address on or before 31 st of january with curriculum vitai. Required qualifications are given below.

1)FISHERIES DEVELOPMENT OFFICER (FDO): 11places
Diploma in fisheries (one year) or Graduate-Arts, Commerce or Science Salary: Rs 8,500>

2) PLANNING OFFICER-(fisheries) (FO):01 place
B.A,B.Com or B.Sc Salary:Rs.12,500>

03)MARINE ENGINEER , SASSISTANT (MEA):01 place
B.Sc preferably in Eng. Salary: Rs.25,000

04) DATA ENTRY OFFICER:01 place
A/L with Computer, B.Sc., B.A., B.Com Computer Science Salary: Rs.10,000

05) FISHERIES EXTENSION OFFICER (FEO)
A/L or Diploma in fisheries Salary: Rs.4,500-Rs.5,000

Programme Director, fisheries and Aquaculture Development, Post Tsunami Rapid Rehabilitation and Development Programme, Tamils Rehabilitation Organization, Kandy Road, Kilinochchi. (சி.11220)


# நீங்காத நினைவுகளில் 31 ஆம் நாள்





| அன்னையின் மடியில் | அலையின் பிடியில் | அன்னை மடியில் | அலையின் பிடியில் |
|---|---|---|---|
| 17 - 10 - 1954 | 26 - 12- 2004 | 30 - 05 - 2001 | 26 - 12 - 2004 |

## திருமதி.றோஸ்மலர் தனபாலசிங்கம்

## செல்வி.நிதர்சனா சுதாகரன்

கடந்து 26.12.2004 அன்று ஆழிப்பேரலையின் அனர்த்தத்தால் எம்மை விட்டுப் பிரிந்து எம் பாச உறவுகளே உங்கள் நினைவுகள் எம்மை விட்டு என்றும் பிரியாது எம்மைத் தவிக்க விட்டு பாசத்துடன் பேர்த்திகள் இருவரும் ஒன்றாக சேர்ந்து விட்டீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முகவரி:-
மருதங்கேணி வடக்கு,
தாளையடி

என்றும் உங்கள்
நினைவுடன் வாழும்
உங்கள் அன்பு உறவுகள்

(5597)

# 31 ஆம் நாள் நீங்காத நினைவில்

அன்னை மடியில்

11 ✷ 05 ✷ 2001



அலையின் பிடியில்

26 ✷ 12 ✷ 2004

## செல்வன் சிவகுமார்-பிரியதர்ஷன் (தர்ஷன்)

(மருதங்கேணி வடக்கு)

அன்னை அணைப்பிலிருந்த உனை
அலை வந்து பறித்ததுவோ- தர்ஷா
அம்மாச்சி, அப்பாச்சி எனும் அன்பு
மொழி கேட்க ஏங்குதடா
உன்தாய்தனை
உள்ளங்கள்.

மருதங்கேணி, வடக்கு
வடமராட்சி கிழக்கு

என்றும் உன் நினைவுடன்
அப்பா, அம்மா,
அம்மப்பா குடும்பம்,
அப்பப்பா குடும்பம்.

(5596)

## கண்ணீர் அஞ்சலிகள்

தமிழர் தாயகப் பகுதியில் 26-12-2004 அன்று ஏற்பட்ட கடலன்னையின் சீற்றத்துக்குள்ளாகிச் சாவடைந்த மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன் உறவுகளை இழந்து தவிக்கும் அனைவருக்கும் எமது ஆழந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

*தமிழீழ மாணவர் அமைப்பினர்,*
*கணினிப் பயிற்சி நிலையம்,*
*முல்லை மாவட்டம்.*

(5665)

## 31 ஆம் நாள் அலையழிந்த நினைவலை

**மலர்வு:-2004.03.28**
**உதிர்வு:-2004.12.26**




செ.செல்வன் (நிமலராஜ்)
குடும்பத்தினர்
குமுளமுனை

(5577)

## இரு நாட்டுப் பிரதமர்கள் சந்தித்துப் பேசுவர்

(இஸ்லாமபாத்)

பங்களாதேஷில் பாகிஸ்தான் பிரதமரை மன்மோகன்சிங் சந்தித்துப் பேசுகிறார்.


பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் 'சார்க்' மாநாடு அடுத்த மாதம் 5,6ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இதிலே தெற்காசிய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்கின்றார்கள். பிரதமர் மன்மோகன்சிங் பாகிஸ்தான் பிரதமர் சவுகத் அஜிஸ் ஆகியோரும் 'சார்க்' மாநாட்டுக்காக டாக்கா செல்கின்றார்கள்.

மாநாட்டின் இடைவெளியில் மன்மோகன்சிங்கும், சவுகத் அஜீசும் தனியாகச் சந்தித்துப் பேச இருப்பதாக பாகிஸ்தான் வெளி உறவுத்துறை செய்தித் தொடர்பாளர் மசூத்கான் இஸ்லாமபாத்தில் நேற்று நிருபர்களிடம் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

2003ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் எல்லைக் கட்டுப்பாட்டு கோடு பகுதி முழுவதும் இரு நாட்டு இராணுவமும் போர் நிறுத்தத்தைச் கடைப்பிடித்து வருகிறது. இந்த நிலையில் சமீபத்தில் பாகிஸ்தான் இராணுவம் இந்தியாப் பகுதியில் குண்டு வீசியதாக இந்தியத் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டது.

இது போன்ற குற்றம் ஒரு பக்கம் இருந்தாலும் போர் நிறுத்தம் தொடர்ந்து நீடிக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம் இரு பிரதமர்கள் சந்திப்பை இது எந்த விதத்திலும் பாதிக்காது இவ்வாறு மசூத்கான் கூறினார்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 04 - 07 - 1948

இறப்பு 26 - 12 - 2004

### பொன்னுத்துரை தனபாலசிங்கம்
(வத்திராயன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர்)

வத்திராயனில் வசித்து
வந்தோருக்கு வழிகாட்டி
கலைகளைக் கற்றுக்கொடுத்து-இன்னும்
எம் கண்களில் தெரிகின்ற தீபமே

உங்கள் பிரிவால் வாடி நிற்கும்
குடும்பத்தினர்,
(பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்)

(5610)

## துயர் பகிர்கிறோம்



**26.12.2004 அன்று கடலன்னையின் கொடும் பிடியில் அகப்பட்டு தமது உறவுகளைப் பறிகொடுத்தும் உடமைகளை இழந்தும் வாடியிருக்கும் எமது கல்வி வலயத்துக்குட்பட்ட கல்விசார் சேவையாளர்கள்.**

01) திருமதி க. அற்புதராசா
02) திரு. த. பங்கயற்செல்வன்
03) திருமதி விக்கினேஸ்வரராஜா இந்துமதி
04) திருமதி க. புளோரன்ஸ் கனிஸ்ரா
05) திருமதி பொ. கருணைராசா
06) திரு. கெனிகவிஸ்ரஸ் பிரட்றிக்
07) திரு. சி. சுரேஸ்நாதன்
08) திருமதி தேவகி அருந்தவராசா
09) திரு. இராமநாதன்இன்பதாஸ்
10) திரு. அந்தோனிப்பிள்ளை அன்ரன்டயஸ்
11) திருமதி சிவஞானம் சசிகரன்
12) திரு. கிருஸ்ணபிள்ளை சாந்தகுமார்
13) திரு. ஆ.ஜீவஜீவன்

ஆகியோரின் துயரில் நாமும் இந்நாளில் பங்குகொள்வதோடு கடல் மடியில் உயிர் நீத்த அத்தனை ஆத்மாக்களும் அமைதியடைய இறைவனை வேண்டி நிற்கிறோம்.

*வலயக் கல்விப் பணிப்பாளர்,*
*வலயக்கல்விப் பணிமனைஅன்புறவுகள்,*
*கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,*
*(ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு)*
*அதிபர்கள், ஆசிரியர்கள்.*

துணுக்காய், வலயம்.

(சி-11096)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சாரதி பதவி வெற்றிடங்களை அமைய அடிப்படையில் நிரப்புவதற்கான

## விண்ணப்பங்கள் கோரல்

இம்மாவட்டத்தில் கடந்த 2004.12.26 அன்று ஏற்பட்ட "சுனாமி" கடல் அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட புனரமைப்புப் பணிகளிலும், ஏனைய அத்தியாவசியப் பணிகளிலும் ஈடுபடுத்துவதற்கான அமைய சாரதி பதவி விண்ணப்பங்கள் இம்மாவட்டத்தைச் சேர்ந்தவர்களிடம் இருந்து கோரப்படுகின்றன.

01. **தகைமைகள் :-**

[அ] பின்வரும் வாகனங்களைச் செலுத்தக்கூடிய வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரம் உடையவர்களாகவும், 02வருடத்திற்குக் குறையாத தனியார் அல்லது திணைக்களங்களில் கடமையாற்றிய முன் அனுபவமும் உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன், நேர்முகப் பரீட்சையின்போது அதனை நிரூபிக்கக்கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

01. உழவு இயந்திரம் (ரக்டர்)
02. பவுசர்.
03. லொறி (பாரஊர்தி)
04. ரிப்பர்.
05. கலி எம்ரியர் பவுசர்.
06. பயணிகள் வான்.
07. பிக்அப் வாகனம்.
08. மற்றும் ஏனைய கனரக வாகனங்கள்.

[ஆ] வயது எல்லை- விண்ணப்ப முடிவுத்திகதியன்று 25 தொடக்கம் 55வரை.

02. நேர்முகப்பீட்சையின்போது மேற்கூறப்பட்ட தங்கள் சகல தகுதிகளையும் உறுதிப்படுத்துவதற்காக அதற்கான ஆவணங்களின் மூலப்பிரதிகளைப் பார்வையிடும்பொருட்டு சமர்ப்பிக்க ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

03. விண்ணப்பங்களை தாங்களாகவே உரியமுறையில் தயாரித்து, பூரணப்படுத்தி பதிவுத்தபால் மூலம், 'அரசாங்க அதிபர், கச்சேரி, முல்லைத்தீவு' என்ற விலாசத்திற்கு 2005.02.07ஆம் திகதியன்றோ, அதற்கு முன்னரோ அனுப்பிவைத்தல் வேண்டும். நேரில் விண்ணப்பங்கள் கையேற்கப்பட மாட்டாது.

04. விண்ணப்ப தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "அமைய சாரதி பதவிக்கான விண்ணப்பம்'' என்று தவறாது குறிப்பிடல் வேண்டும்.

திருமதி.இமெல்டா சுகுமார்
அரசாங்க அதிபர்,.
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி-11215)




# துயர் பகிர்கிறோம்

தேச விடுதலைப் பயணம்
முளை கொள்ளத் தொடங்கிய -அந்த நாட்கள்...
தம் சிறகுக்குள் அக்கினிக் குஞ்சுகளை அடைகாத்து,
விடுதலைத் தீயை அணைய விடாது காத்த
தேசப் பற்றுக் கொண்ட நன்றிக் கரங்களில்,
அன்னையின் கரமும் உயர்ந்தது.
ஊரெல்லாம் போர் சூழ...,
தேசம் விட்டு தேசம் சென்றும்,
செந்தமிழ் பேசிடும் இளைய தலைமுறை வளர்க்க
அன்னை பூபதி கலைக் கூடம் தனில்
அரும் பணி புரிந்த அன்புக் கரம்
போரோய்வில் தாய் மண்ணின் மடி வந்து,
சிட்டுக்கள் சிறகடிக்கும் அறிவுச்சோலையிலும்
கல்விக் கூடமதிலும் நேசக் கரம் நீட்டி
அறிவுப் பசிக்குத் தீனி போட்ட தாய்க்குருவி,
பொங்கி எழுந்த பேரலையின் கோரப்பசிக்கு பலியாகி...
இன்று மாதம் ஒன்று....
இந் நாளில் இவர் நினைவுடன்
பேரலையில் அள்ளுண்டு போன- எம்
தேச உறவுகள் அனைவரதும்
ஆத்ம சாந்திக்காய் வேண்டுகிறோம்.



## நாட்டுப்பற்றாளர்
## பிலோமினா ஜோர்ஜ் (ரீச்சர்)

தகவல்:-
அன்பு மகன்
சிவநேசன் குடும்பம்

(சி.11223)


# பண்டிகைக் கால பரிசு மழை!




முதலாம் பரிசு - 50 கிராம் கோல்ட் பார்
மற்றும் 20கிராம், 10கிராம், 4 கிராம் பரிசுகள் 70 அதிர்ஷ்டசாலிகளுக்கு

வெளிநாடுகளில் இருக்கும் உங்கள் அன்புக்குரியவர்களிடம் இருந்து வெஸ்டர்ன் யூனியன் பணப்பரிமாற்றத்தின் மூலம் பணத்தை இலங்கையின் அங்கீகாரம் பெற்ற MMBL உப முகவர்கள் ஊடாகப் பெற்று பரிசுகளை வெல்லுங்கள்!

விபரங்களுக்கு MMBL முகவரைத் தொடர்பு கொள்ளுங்கள் 011-2372333

ரூபாய் 250,000 இற்கு மேல் காசு பெறும் வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியான பரிசுகள்

AUTHORISED AGENT

WESTERN UNION
பணப்பரிமாற்றம்

நிபந்தனைகள் பிரயோகிக்கப்படும்
இச்சலுகை டிசம்பர் 2004, ஜனவரி 2005 மாதங்களில் பணப்பரிமாற்றம் செய்பவர்களுக்கு மட்டும்!

MMBL
Money Transfer(PVT) LTD
300,Galle Road, Colombo-03
(வெளிநாட்டு நாணயம் மாற்று முகவர்)
அநேகமான இடங்கள் 365 நாட்களும் திறந்திருக்கும்

(சி-11121)

FLEX Graphic


# இறுதி டெஸ்ட் போட்டி சமநிலையில் நிறைவு

# தொடரைக் கைப்பற்றியது இங்கிலாந்து



இங்கிலாந்து- தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் செஞ்சூரியன் பார்க் மைதானத்தில் நடைபெற்று வந்த ஐந்தாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவுபெற்றது. இதன் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-1 என்ற நிலையில் இங்கிலாந்து அணிகைப்பற்றியது. போட்டியின் இறுதி நாளான நேற்று 44 ஓவரில் இங்கிலாந்து வெற்றி பெற 185 ஓட்டங்களை நிர்ணயித்தது தென்னாபிரிக்கா. இதன் படி வெற்றி இலக்கை நோக்கி ஆடிய இங்கிலாந்து ஓட்டமெதுவும் பெறாது அன்ருஸ்ரோசின் விக்கெட்டை இழந்தது. பின்னர் சுதாகரித்து ஆடிநிர்ணயிக்கப்பட்ட ஓவரில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 80 ஓட்டங்களையே பெற்றமுடிந்தது.

வெற்றியிலக்கு சிறியதாக இருந்தபோதும் இங்கிலாந்து அணி போட்டியை சமன் செய்யவே அதிக அக்கறை காட்டியது குறிப்பிடத் தக்கது.



முன்னதாக தென்னாபிரிக்கா இரண்டாவது இனிங்சில் வில்லியர்ஸ், கலிஸ் ஆகியோரின் சதத்தின் உதவியுடன் 296 ஓட்டங்களை ஆறு விக்கெட்டுக்களை இழந்து பெற்றபோது ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. கலிஸ் ஆட்டமிழக்காது 156 ஓட்டங்களையும், வில்லியர்ஸ் 109 ஓட்டங்களையும் பெற்றனர். இவர்கள் இருவரும் இணைந்து மூன்றாவது விக்கெட்டுக்காக 227 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

## நீண்டநாள் முதுகு வலியால் ஓரம் அவதி போட்டியில் கலந்து கொள்ள ஆவல்

நீண்ட நாட்களாக முதுகு வலியால் அவதியுறும் நியூசிலாந்தின் ஜேக்கப் ஓரம் அடுத்துவரும் அவுஸ்திரேலியாவுடனான போட்டித் தொடரில் பங்கேற்க முடியாது விடுமோ என்ற அச்சத்துடன் இருக்கிறார். இவர் உலக 11 பேர் அணியுடனான இரண்டு போட்டிகளிலும் பங்கேற்கத் தவறினார். இந்தக் காயம் இனம் காணப்படாத போதும் ஓய்வில் இருப்பது இப்போட்டித் தொடரை ஓரம் கட்ட வேண்டியேற்படுமோ என்று அவர் கவலை கொள்கிறார்.

## அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் அரையிறுதியில் செரீனா, ஷெரபோவா



கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்திரேலியா ஓபன் டென்னிஸ் போட்டி மெல்பேர்ன் நகரில் நடைபெற்று வருகிறது.

உலகின் 4 ஆம் நிலை வீராங்கனையும், விம்பிள்டன் சம்பியனுமான மரியா,ஷரபோவா (ரஷ்யா) கால் இறுதியில் சக நாட்டைச் சேர்ந்த சுவெட்லகுஜ்நெட் சோவாவை எதிர்கொண்டார்.

அமெரிக்க ஓபன் சம்பியனும்,5 ஆம் நிலை வீராங்கனையுமான சுவெட்லானா முதல் செட்டை 6-4 என்ற கணக்கில் வென்று அதிர்ச்சி அளித்தார். ஆனால் அதற்கு அடுத்த செட்களில் ஷெரபோவாவின் அபாரமான ஆட்டத்திற்கு ஈடுகொடுத்து விளையாட முடியாமல் சுவெட்லானா திணறினார்.

2 ஆவது செட்டை 6-2 என்ற கணக்கிலும், 3 ஆவது செட்டை



6-2 என்ற கணக்கிலும் ஷெரபோவா வென்று அரை இறுதிக்குத் தகுதி பெற்றார். 4-6,6-2,6-2, இந்த வெற்றியைப் பெற அவருக்கு 137 நிமிட நேரம் தேவைப்பட்டது.

17 வயதான ஷெரபோவா அரை இறுதியில் செரீனா வில்லியம்சை எதிர் கொள்கிறார்.

7 ஆம் நிலை வீராங்கனையான செரீனா (அமெரிக்கா) கால் இறுதியில் இரண்டாம்நிலை வீராங்கனையான அமெய்லி மவ்ரஸ்மோவை எதிர்கொண்டார். இதில் செரீனா 6-2,6-2 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வென்றார்.



ஈரான் தலைநகர் தெஹ்ரானில் இஸ்லாமிய- ஆசிய நாடுகளில் மகளிருக்கு மட்டும் நடைபெறும் முதலாவது உலக விளையாட்டுப் போட்டியில் பங்கேற்கும் ஈராக்கிய மகளிர்,தொடக்க நாளில் (ஞாயிறு) அணி வகுத்து வந்த காட்சி.

## அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் அகாஸியை தோற்கடித்தார் பெரடர்



அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் காலிறுதிப் போட்டி ஒன்றில் சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெரடர் வெற்றி பெற்றுள்ளார்.

மிகவும் பரபரப்புடன் எதிர் பார்க்கப்பட்ட இப் போட்டியில் அமெரிக்காவின் அந்ரேஅகாஸியை எதிர் கொண்டபெரடர் 6-3, 6-4, 6-4 என்ற நேர் செட்டில் அகாஸியைத் தோற்கடித்தார்

இதன் மூலம் அரையிறுதிக்கு முன்னேறியுள்ள பெரடர் மரட் சபினை எதிர்கொள்கிறார்.



விளையாட்டு

ஸ்பெயினில் நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டியின்போது ஸ்பெயினின் மலோக்கா வீரர் லூலியானோ கால் தடம் மூலம் மட்ரிட்டின் றொனால்டோவை வீழ்த்தும் காட்சி.

## அமெரிக்க கிரிக்கெட் சபையை கலைத்துவிட ஐ.சி.சி முயற்சி



அமெரிக்க கிரிக்கெட் சபையைக் கலைத்துவிட சர்வதேச கிரிக்கெட்சபை தீர்மானித்திருப்பதாக ரகசியத் தகவல்கள் வெளியாகியுள்ளன. காரணம் அந்நாட்டு கிரிக்கெட்சபையின் நிர்வாக முறையில் ஐ.சி.சி திருப்திப்படாமையாகும். அத்துடன் அந்த அணி ஏனைய சர்வதேச அணிகளுடன் போட்டியிட்டு முன்னேறிவிடுமா என்ற சந்தேகமும் எழுந்திருப்பதாகவும் இது கடந்த ஐ,சி,சி சம்பியன் தொடரில் அவுஸ்திரேலிய நியூசிலாந்து அணிகளுடனான போட்டிகள் மூலம் தெரியவந்திருப்பதாகவும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

அத்துடன் ஏனைய சர்வதேச அணிகளுடன் இந்த விடயம் தொடர்பாகப் பேச்சுக்கள் நடத்தி அவர்களின் முடிவு பெறப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் நெதர்லாந்து அணிஇந்தியா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியாவுடனான போட்டிகளில் ஓரளவு திறமையை வெளிப்படுத்தியிருப்பதாகவும் அது போல ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மொறக்கோ அணிகளும் திறமை காட்டுவதாகவும், அமெரிக்க அணி சற்றுப் பின்னடைவைக் காட்டுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.எனினும் இந்த வெளிப்பாடு மிக ரகசியமாகவே இருப்பதாகக் கூறப்படுகிறது.

## பாகிஸ்தான் அணிக்கு எதிரான போட்டி சச்சின் ஆடுவதில் குழப்பம் நீடிக்கிறது



பாகிஸ்தான் அணிக்கெதிராக நடக்கவிருக்கும் போட்டிகளில் சச்சின் ஆடுவதில் குழப்பம் இன்னும் நீடிக்கிறது.

தோள்பட்டை காயம் காரணமாக அவதிப்பட்டு வரும் டெண்டுல்கர் தற்போது முழு ஓய்வில் இருக்கிறார்.கடைசியாக டெண்டுல்கர் டிசம்பர் 27 ஆம் திகதி ஒருநாள் போட்டியில் ஆடினார். இதன் பின்னர் மருத்துவர் கூறிய ஆலோசனையின் படி டெண்டுல்கர் ஓய்வில் இருக்கிறார். இதன் காரணமாக சுனாமி நிதிக்கான கிரிக்கெட் போட்டியிலும் டெண்டுல்கர் ஆடவில்லை.

மும்பையில் நடந்த விழாவில் கலந்து கொண்ட டெண்டுல்கர் நிருபர்களிடம் கூறுகையில். 5 முதல் 6 வாரங்கள் வரை ஓய்வு எடுக்கும்படி டாக்டர் என்னிடம் கூறியுள்ளார். இதன் காரணமாக டிசம்பர் 27 ஆம் திகதிக்குப் பின்னர் இன்னும் நான் போட்டியில் துடுப்பைத் தொடவில்லை. பாகிஸ்தான் அணிக்கு எதிராக போட்டியில் ஆட அதிக விருப்பத்துடன் காத்திருக்கிறேன். அதேசமயம் மருத்துவரின் ஆலோசனையும் எனக்கு முக்கியம். அவர் கூறினால் மட்டுமே இந்தப்போட்டியில் கலந்து கொள்வேன் எனத் தெரிவித்தார்.

## பாலியல் துஷ்பிரயோகம் பாக்.கிரிக்கெட்சபை மறுப்பு



அவுஸ்திரேலியாவில் சுற்றுப் போட்டியை மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் வீரர் ஒருவர் மெல்போர்னில் பெண்ணொருவர் மீது பாலியல் துஷ்பிர யோகம் மேற்கொண்டார். என்ற குற்றச் சாட்டை பாகிஸ்தான் கிரிக்கெட்சபை திட்டவட்ட மாக மறுத்துவிட்டது.

கிரிக்கெட் சபை நடத்திய முழுமையான விசாரணைகளிலிருந்து இதற்கான எந்த ஒரு ஆதாரமும் கிடைக்கவில்லை என அது மேலும் தெரிவித்துள்ளது. மேற்படி சம்பவத்தில் தொடர்புடையதாகக் கூறப்படும் பெண் அந்நாட்டுப் பொலிசாரிடம் முறையிடவில்லை. ஆயினும் சர்வதேச ஊடகங்கள் மலிவான முறையில் பெருமையைத் தேடிக்கொள்ள முயல்கின்றன என்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. இதனால் பெரும் ஏமாற்றம் அடைவதாகவும் தெரிவித்துள்

## சானியாவுக்கு அறுவைச் சிகிச்சை




அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டிக்கான 3ஆவது சுற்றுக்கு முன்னேறிய சானியா மிர்ஷாவுக்கு அறுவைச் சிகிச்சை நடக்க உள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டிக்கான 3ஆவது சுற்றுக்கு முன்னேறிய முதல் இந்திய வீராங்கனை என்ற பெருமை பெற்ற சானியா மிர்ஷா கடைசியில் செரீனா விடம் தோல்வியடைந்தார். இந்தப் போட்டியின் போது சானியா தோள்பட்டை வலி யால் அவதிப்பட்டார். இதற்காக விரைவில் அவருக்கு அறுவைச் சிகிச்சை நடக்கவுள்ளதாக செய்திகள் கூறுகின்றன.




ஒஸ்ரியாவில் நடைபெற்ற உலகக் கிண்ண பனிச்சறுக்குப் போட்டியில் சுப்பர் ஜிபோட்டியில்வெற்றிபெற்ற அமெரிக்காவின் டரன் ராவ்ஸ்கும்(இடது) ஹெர்மன் மேயரும் அவரது சகாவான பிரிட்ஸ் ஸ்தோபலும் வெற்றிப் பீடத்தில் நிற்கின்றனர்.



### சிந்தனைக்கு

சிங்களப் பயங்கரவாதமானது எமது தேசிய ஆன்மாவில் வீழ்த்திய வடுக்கள் என்றுமே மாறப் போவதில்லை.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 26-01-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@eezhanatham.com

## இலகுவான தொன்றல்ல!

"வந்து குவியும் நிதியுதவிகள் பேராவலுடைய பகட்டான திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படக்கூடும். அரசியல் நிலைப்பாடு காரணமாக வீண்விரயம் செய்யப்படக்கூடும் அல்லது ஊழல்தனமான அதிகாரிகளினால் கையாடப்படக்கூடும்" என மேற்குலக உதவி அதிகாரிகளும், கண்காணிப்பு அமைப்புக்களும் கொண்டுள்ள அச்சம் நியாயப்பாடானதே. ஏனெனில், இவை யாவற்றிற்கும் சிறிலங்காவில் நிறையவே வாய்ப்புண்டு.

சுனாமியினால் பாதிப்புற்ற இலங்கைக்குப் பல்வேறு நாடுகள், சர்வதேச மற்றும் உள்ளூர் அமைப்புக்கள் தனியார் எனப்பல தரப்பில் இருந்தாலும் பெருமளவிலான உதவிகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவ் உதவிகள் கிடைக்கப்பெறவில்லை எனவும் எவரும் மறுத்துக்கூறவும் முடியாது. ஆனால், இன்னமும் நிவாரணப் பணிகள் சீர்செய்யப்பட்டதாக இல்லை.

குறிப்பாக, நிவாரணப் பகிர்வில் இன, மத மற்றும் கட்சி ஆகியவை காத்திரமான பங்கு வகிப்பவையாக உள்ளன. இதில் இன ரீதியாக என்னும்போது தமிழ், முஸ்லிம் மக்கள் தமக்குரிய நிவாரணங்களைப் பெற முடியாதவர்களாகவே உள்ளனர். அதாவது, சர்வதேசம் பாதிக்கப்பட்டோருக்கென வழங்கிய உதவிகளில் தமக்குரிய பங்கீட்டை அவர்களினால் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

அத்தோடு, வடக்கு-கிழக்கில் தான் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் புறக்கணிக்கப்படுகின்றார்கள் என்பதில்லை. தென்னிலங்கையில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களும் கூட இனவாத ரீதியிலேயே நோக்கப்படுகின்றனர். குறிப்பாகக் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டைப் பகுதியில் வாழ்ந்த தமிழ், முஸ்லிம் மக்களுக்கு உரிய நிவாரணங்கள் வழங்கப்பட்டதாக இல்லை.முஸ்லிம் மக்கள் இதற்கெதிராகக் குரல் எழுப்பத் தொடங்கியுள்ளனர்.

இவ்வாறு வழங்கப்படாமல் போனமைக்கு நிவாரணப் பொருட்களின் பற்றாக்குறையோ அன்றி நிவாரணப் பணிகளில் ஏற்பட்டுள்ள இடையூறுகளோ காரணம் இல்லை. கிடைக்கப்பெற்ற நிவாரணப் பொருட்களை இன, மத பேதமின்றியும், கட்சி பேதமின்றியும் பகிர்ந்தளிக்க ஆளும் கூட்டணியும், அரச அதிகாரிகளும் தயாராக இல்லாமையே காரணமாகும்.

எடுத்துக் காட்டாக, இனப்பாகுபாடு காரணமாக தமிழர் தாயகப் பகுதிக்கு கிடைக்கப்பெற வேண்டிய நிவாரண உதவிகளைப் பகிர்ந்தளிக்க அரசாங்கம் தயாராக இருக்கவில்லை. அடுத்ததாக சிங்களப் பிரதேசங்களில் இன ரீதியிலான பாகுபாடு, மத ரீதியிலான பாகுபாடு, கட்சி ரீதியான வேறுபாடு என்பன காரணமாகப் பலருக்கு உரிய நிவாரணங்கள் கிடைக்கப்பெறவில்லை.

இது மாத்திரமின்றி, அரசாங்கம் வரைந்துள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக் கட்டியெழுப்பும் திட்டத்திலும், தமிழர் தாயகப் பகுதிகள் ஓரம்தள்ளப்பட்டுள்ளதோடு, சிங்களவர் பகுதியில் ஏற்பட்டுள்ள அனர்த்தங்கள் மிகைப்படுத்தப்பட்டுள்ளவையாகவும், அதீத மதிப்பீடு செய்யப்பட்டுள்ளவையாகவும் உள்ளன. இந்நிலையில், பாதிப்பின் அடிப்படையில் சீரான பங்கீடு என்பது எதிர்காலத்தில் கூடச் சாத்தியமானதொன்றாக இருக்க வாய்ப்பில்லை.

இது ஒருபுறம் இருக்க, சுனாமி அனர்த்தத்தில் இருந்து அரசியல் லாபத்தை ஈட்டிக்கொள்வது யார்? என்ற ரீதியில் ஆளும் கூட்டணியினருக்குள்ளேயே பெரும் போட்டி எழுந்துள்ளது. அரசினதும், நிறுவனங்களினதும், தனியாரதும் நிவாரணப் பொருட்களைத் தனது நிவாரணப் பொருட்கள் என ஜே.வி.பி. விநியோகிக்க முயன்றதில் இருந்தே நிவாரணப் பொருட்கள் விநியோகத்தில் கட்சி அரசியல் எத்தகைய முக்கியத்துவம் பெறும் என்பது புரிந்துகொள்ளத்தக்கதொன்றே.

இதேவேளை, சிறிலங்கா ஆட்சியாளர்கள் வாக்கு வங்கிகளை கவரக் கூடியதாகப் பகட்டான திட்டங்களும், வீண்விரயம் செய்யத்தக்கதுமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக்கூடும் என்பதும் எதிர்பார்க்கத்தக்கதே. ஏனெனில், நிவாரணப் பணிகளை கட்சி அடிப்படையில் மேற்கொள்ள விளைவோர் நிவாரணப்பணிகளைத் தமது மாபெரும் சாதனையாகக் காட்ட விளைவார்கள் என்பது எதிர்பார்க்கத்தக்கதே. இதற்கெனப் பெரும் தொகை நிதியையும் அவர்கள் செலவீடு செய்யத் தயங்கப் போவதில்லை இது கடந்த காலத்திலும் வெளிப்படுத்தப்பட்டதுவே.

இதேவேளை, நிவாரணப்பணிகளின்போது பெருமளவான ஊழல், மோசடிகள் இடம்பெறுவதற்கு வாய்ப்புண்டு. இது தவிர்க்கப்பட வேண்டுமானால், சிறிலங்கா அரச இயந்திரமே தலைகீழாகப் புரட்டப்பட வேண்டும். ஏனெனில், சிறிலங்காவில் உள்ள அரசியல்வாதிகளில் இருந்து அடிமட்ட அதிகாரிகள் வரை ஊழல் மோசடிகளில் ஊறித் திளைத்தவர்கள்.

ஆகையினால், இலங்கை அரசாங்கத்திற்குக் கிடைக்கப்பெறும் நிதியுதவிகள் உரியவர்களைச் சென்றடைவதென்பது இலகுவான தொரு காரியமாக இருக்கப்போவதில்லை. இதில் அவதானிப்பாளர்கள், உதவிபுரியும் நாட்டு அதிகாரிகள் கவனம் செலுத்துவதாக இருப்பினும், அவர்களால் இதனைத் தடுத்து நிறுத்த முடியுமா? என்பது சந்தேகமே. ஏனெனில், இதில் சிறிலங்கா தரப்பினர் நீண்டகால அனுபவமும், தேர்ச்சியும் கொண்டவர்கள்.

## ஆழக்கடல் எழுந்து ஈழக்கரை அழித்த நாள்



ஆழக்கடல் எழுந்து
ஈழக்கரை அழித்து
ஊழிக்கூத்தாடி – எம்
உறவழித்து சென்றன்று

காலை புலர்ந்து சென்று
கன நேரம் ஆகமுன்னே –
கடல்தன்
வேலை முடித்துச் செல்ல
பிணமானார் எம் சொந்தம்

இன்பவாழ்வு தந்த
இலக்கிய கடற்தாயே
துன்ப வாழ்வு தந்து
துயர் கடலில் ஆழ்த்தி விட்டாய்

சொந்தங்களை இழந்துநிற்கும்
வெந்த மனங்களிங்கு – உன்
பந்தமே வேண்டாமென
பகைக்கிறார் உனைப் பார்த்து

மரணங்கள் மலிந்த நாள் வந்து
மாதம் ஒன்று ஆனதின்று
மறப்போமா இந்நாளை
மறப்போமா துயர் நினைவை

அலைகடலில் ஆர்ப்பரிப்பில்
அமரரான எம் உறவே
உமை நினைந்து உருகுகிறோம்
உமைப்பிரிந்து வருந்துகிறோம்.

முத்தையனூர் ப.துஷ்யந்தன

## அரச மருத்துவர் போராட்டத்தால் வைத்தியசாலைகள் பாதிப்பு

ரஷ்யாவில் பயிற்சிபெற்ற மருத்துவர்களை இலங்கையில் சேவையில் ஈடுபடுத்துவதை ஆட்சேபித்து நேற்று அரசாங்க மருத்துவர்கள் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்

இதன் காரணமாக வைத்திய சாலைகளின் பணிகள் ஸ்தம்பித்துள்ளன. இந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் நிலை குறித்துக் கருத்துரைக்கும் வைத்தியசாலைப் பணிப்பாளர் ஹெக்டர் வீரசிங்க திறந்த நிலை வைத்திய பிரிவு பாதிப்படைந்துள்ளது எனினும் அவசர சேவைகள் யாவும் உரிய வகையில் மேற்கொள்ள. ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விபத்து சேவையும் குறிப்பிட்டளவில் இயங்கச் செய்யப்பட்டுள்ளது எனக் கூறினார்
பதிவு செய்யப்பட்ட மற்றும் உதவி மருத்துவர்கள் இன்றைய பணிப் புறக்கணிப்புத் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ளனர்

இது தொடர்பில் உதவி மருத்துவர் சங்கத்தின் செயலர் மஹிந்த லியனகே தெரிவிக்கையில் உதவி மருத்துவர்கள் மிகவும் அனுபவம் வாய்ந்தவர்கள் நாட்டில் 75 வீத மக்களின் சுகநலனில் ஈடுபட்டு வருகின் றனர்.அவர்களும் பல பரீட்சைகளுக்கு முகம் கொடுத்தே வைத்திய சேவையில் ஈடுபட்டுள் ளார்கள். எனவே அவர்கள் தற்ச மயம் அரசாங்க மருத்துவர்கள் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டுள்ள வேளையில் உரிய கடமைகளைச் செய்து வருகின்றனர்.

அரசாங்க மருத்துவர்கள் நீதிமன்ற உத்தரவை மீறி இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவது ஏற்றுக் கொள்ள முடியாதது எனத் தெரிவித்தார். இதே வேளை

இலங்கை வைத்திய சபையின் நடவடிக்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்க சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இணங்கியுள்ளார். அரசாங்க மருத்துவர் சங்கத்துடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அரசாங்க வைத்தியர்கள் நேற்று ஆரம்பித்த பணிப்புறக் கணிப்பை இரண்டு வாரகாலத்துக்கு விலக்கிக் கொள்ளத் தீர்மானித்துள்ளனர் .

அரசாங்க வைத்தியர் சங்கச் செயலர் அனுருத்த பாதெனிய் தகவல் அளிக்கையில் சுகாதார அமைச்சருடன் நேற்று இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் மருத்துவ சபையின் நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்தி வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இரண்டு வாரகாலப் பகுதிக்குள் தமது பிரச்சினைக்குத் தீர்வு இல்லையேல் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையை மேற் கொள்ளப்போகிறோம். ரஷ்யாவில் மருத்துவ பயிற்சியை மூன்று வருடங்களுக்கு மேற்கொள்ள வேண்டும். இதன்போதே சான்றிதழ்களை வழங்க முடியும். எனினும் இலங்கையின் வைத்திய சபையில் பதிவு செய்யப்பட்டுள்ளவர்கள் ரஷ்யாவில் 6 மாதங்களே தங்கியிருந்தமை அவர்களின் கடவுச்சீட்டுகளின் மூலம் தெரியவந்துள்ளது. எனவே இங்கு பாரிய ஊழல் ஒன்று இடம்பெற்றுள்ளதாகவே அரசாங்க மருத்துவர் சங்கம் கருதுவதாகத் தெரிவித்தார். (32)

## —சுனாமியால் அழிவடைந்த சொத்துக்கள் தொடர்பான— முறைப்பாடுகளைப் பதிவு செய்வதில் பொலிசார் அலட்சியப் போக்கு

(யாழ்ப்பாணம்)

சுனாமிப் பேரலையால் அழிவடைந்த சொத்துக்கள் தொடர்பான மக்களின் முறைப்பாடுகளைப் பெற்று அவற்றைச் சான்றுபடுத்தும் நடவடிக்கைகளில் சிறிலங்காப் பொலிசார் அலட்சியப் போக்குடன் நடத்து கொள்வதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு ஏற்பட்ட சொத்தழிவுகள் சம்பந்தமான விடயங்களை பொலிசாரிடம் முறையிட்டு அவற்றைச் சான்றுப்படுத்தல் வேண்டும் எனவும்.

இவ்வாறான முறைப்பாட்டுச் சான்றுகளின் அடிப்படையிலேயே அரசினால் நஷ்டஈடுகள் நிவாரணங்கள் என்பன வழங்கப்படும் எனவும் அரசு அறிவித்துள்ளது.

இவ் அறிவித்தலுக்கமைவாக யாழ்.குடாநாட்டில் கரையோரப் பகுதி மக்கள் சுனாமியால் தமக்கு ஏற்பட்ட அழிவுகள் குறித்து பொலிசாரிடம் முறையிட்டு வருகின்ற போதும் இம் முறைப்பாடுகளைப் பெற்று அதனைச் சான்றுப் படுத்துவதில் பொலிசார் தொடர்ந்தும் அலட்சியப் போக்குடனேயே நடந்து கொள்வதாக முறைப்பட்டாளர்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது. இது மக்களின் எதிர்காலத்தைப் பாதித்துள்ளது (33)

## சுனாமி நிவாரண அட்டைகள் விநியோகத்தில் முறைகேடுகள்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் நிவாரண அட்டைகள் பாதிக்கபடாதவர்களுக்கு கிடைத்துள்ளதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இது குறித்து பிரதி சமூக சேவைகள் அமைச்சர் எஸ் எம் சந்திரசேன தெரிவிக்கையில், இந்த விடயம் குறித்துப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. எனவே விசாரணைகள் உரிய வகையில் மேற்கொள்ளப் படுகின்றன. இந்த நிலையில் நிவாரண அட்டைகளை முறைக்கேடாகப் பயன்படுத்துபவர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்படும் என எச்சரிக்கை விடுத்தார் (32)

# சுனாமியில் உயிரிழந்தோர் நினைவாக....



முல்லைத்தீவில்...



யாழ். இல்...



வவுனியாவில்...

## தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் சர்வதேச உதவிகளை அரசு தென்னிலங்கைக்குத் திசை திருப்புகின்றது

– கடற்புலிகளின் துணைத்தளபதி செழியன்

(யாழ்ப்பாணம்)

சுனாமி ஆழிப்பேரனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு எதுவித உதவிகளையும் வழங்காது சிறிலங்கா அரசாங்கம் தமிழர் தாயகப் பகுதிகளுக்கென சர்வதேச நாடுகளால் வழங்கப்படும் உதவிகளையும் திசை திருப்பி அவ் உதவிகள் மூலம் தென்னிலங்கையை மீளக் கட்டியெழுப்பும்முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது.

இவ்வாறு நேற்றைய தினம் யாழ். வடமராட்சி தும்பளையில் இடம்பெற்ற நோர்வே அரசின் படகுதிருத்தும் நிலையத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய கடற்புலிகளின் துணைத்தளபதி செழியன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாச சம்மேளன செயலாளர் சூரியகுமார் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், சிவாஜிலிங்கம்,க்ஜேந்திரன்,பத்மினி சிதம்பரநாதன், சிவனேசன் ஆகியோர் உட்படப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய துணைத்தளபதி செழியன்,

யுத்தத்தின் பிடியில் இருந்து தம்மை மீட்கமுறப்பட்டுக் கொண்டிருந்த தமிழினத்திற்கு சுனாமி ஏற்படுத்திய அழிவுகள் பெரும் தாக்கத்தை உருவாக்கியுள்ளது. இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமான உதவிகள் எதனையும் சிறிலங்கா அரசு வழங்கவில்லை. மாறாக சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக சர்வதேச சமூகத்தினரால் வழங்கப்படும் உதவிகளைக் கூட திசை திருப்பி அவற்றைக் கொண்டு தென்னிலங்கையை வளப்படுத்தும் முயற்சிகளில் அரசு ஈடுபட்டு வருகிறது.

இதனை எம்மால் ஒருபோதும் அனுமதிக்க முடியாது. அரசின் புறக்கணிக்கும் செயற்பாடுகளால் மக்கள் பெரிதும் நொந்து போயுள்ளனர்.

சுனாமி அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள யாழ்.குடாநாட்டு மீனவர்களின் வாழ்வியலையும் பொருளாதாரத்தையும் கட்டியெழுப்புவதற்கு நவீனத்துவம் வாய்ந்த கடற்றொழில் முறைமைகள் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அமுல்படுத்தப்படவேண்டும். இதன் மூலமே இழந்த பொருளாதாரத்தை மீனவர்களால் மீளக்கட்டியெழுப்ப முடியும். இது குறித்து உதவிவழங்கும் பன்னாட்டு சமூகத்தினரும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வியலைமீளமைப்பதற்குப் பதில்அரசு படையினரைப் பலப்படுத்தி வருகிறது. இது மக்கள் மத்தியில் யுத்த பீதியை உருவாக்கியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (33)

-முடிவெட்ட அழைத்துச் செல்லப்பட்டவேளை-

## அகதிமுகாமிலிருந்த சிறுவர்கள் பொலிசாரினால் தடுத்துவைப்பு

சுனாமிஅனர்த்தத்தால் பாதிப்புக்குள்ளான அம்பாறை மாவட்டத்தில் அகதிமுகாமில் தங்கி இருந்த பாடசாலைச் சிறுவர்களை முடிவெட்டுவதற்காக விடுதலைப்புலிகளின் போராளிகள் கூட்டிச்சென்றவேளை அம்பாறை பொலிசார் அனைவரையும் கைது செய்தனர்.

நேற்று நண்பகல் 12.மணியளவில் நடந்த இச்சம்பவத்தின்போது பாடசாலைகள் ஆரம்பிக்க உள்ளமையால்இம்மாணவர்களைப் பாடசாலைக்குச் செல்வதற்கான ஒழுங்குகளைச் செய்துவரும் விடுதலைப் புலிகள் அவர்களை தலைமுடிவெட்டுவதற்காக அழைத்துச் சென்றனர்.

இதனைக் குழப்பும் நோக்கில் மாணவர்களை விடுதலைப்புலிகள் கடத்துவதாகக் கூறி கைது செய்த பொலிசார் நண்பகல் 12. மணிமுதல் மலை ஐந்து மணிவரை அந்தச் சிறுவர்களுக்கு எந்த வித ஆகாரமும் வழங்காது தடுத்து வைத்திருந்தனர்.

இதேவேளை மேற்படி சிறுவர்களை விடுதலைப்புலிகள் தங்களைக் கடத்திச் சென்றதாகக் கூறுமாறும் பொலிசார் பயமுறுத்தியுள்ளனர்.

இதனை அடுத்து அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருடன் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றார். அங்கு பொலிசாருக்கும் இராணுவத்தினருக்கும் இப்பகுதியில் நிவார ணப்பணிகளில் ஈடுபட விடுதலைப்புலிகளுக்கும் உரிமை உண்டெனக்கூறியதை அடுத்து படையினர் விடுதலைப புலிகளிடம் மன்னிப்புக் கோரி னர்.பின்னர் யுனிசெப் பிரதிநிதிகளிடம் சம்பந்தப்பட்ட சிறுவர்களை ஒப்படைத்தனர் யுனிசெப் பிரதிநிதிகள் அவர்களை விடுதலைப்புலிகளிடம் ஒப்படைத்தனர்.

## யாழ். குடாநாட்டில் பரவலாக ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

"சுனாமிக் கடல் கொந்தளிப்பின்போது உயிரிழந்த பொதுமக்களினது ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் குடாநாட்டினில் பரவலாக முன்னெடுக்கப்படுகின்றன. இதன் ஓர் அங்கமாக யாழ்.மரியன்னை தேவாலயத்தினில் (கதீட்ரல் தேவாலயம்),யாழ்.ஆயர் அதிவணக்கத்திற்குரிய தோமஸ் சௌத்தரநாயகம் தலைமையினில் விசேட திருப்பலி பூஜையொன்று நேற்று மாலை ஒப்புகொடுக்கப்பட்டது.

நேற்று மாலை 5.30 மணிக்கு ஆரம்பமான இந்திருப்பலி பூஜையில் கிறிஸ்தவ மகுருமார்களுடன்,ஆயிரத்திற்கும் அதிகமான பொது மக்களும் கலந்து கொண்டு பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

முன்னதாக 'சுனாமி' கடல் கொந்தளிப்பின்போது உயிரிழந்த சிறார்கள்,பாடசாலை மணவர்கள்,இளஞ்சமூகத்தினர் மற்றும் குடும்பத்தலைவன் தலைவியர், வயோதிபர்கள் சார்பினில் தனித்தனியாக ஐந்து மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. அதேவேளை உயிரிழந்தவர்களிற்காக மௌன அஞ்சலி செலுத்தப்பட்ட வேளை தேவாலயத்தின் மணிகளும் ஒலிக்க விடப்பட்டது.

அதேவேளை பாசையூர் புனிதஅந்தோனியார் தேவாலயங்களிலும் நேற்று உயிரிழந்த மக்களின் 31ஆம் நாள் நினைவு தினமும்,இரங்கல் திருப்பலி பூஜையும் அனுஷ்டிக்கப்பட்டது.

### காணாமற்...

நடுவில் அமைக்கப்பட்ட விதைகுழியில் வைக்கப்பட்டு பிரார்த்திக்கப்பட்டது. இறுதியில் உயிரிழந்தவர்களின் உறவுகள் கதறியழுதவாறு மண்,மெழுகுவர்த்திகள் என்பவற்றைப்போட்டு தமது அஞ்சலியை செலுத்தினர். இந்நிழ்வில் மதகுருமார்,தமிழீழ கடற்படைச் சிறப்புத்தளபதி சூசை மற்றும் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளை வற்றாப்பளைக்கண்ணகை அம்மன் ஆலயத்திலும் அந்தியேட்டிகிரியைகளும், விசேட பூசைகளும் நடைபெற்றதுடன் அன்னதான நிகழ்வும் நடைபெற்றது. நேற்று முன்தினமும் இங்கு பூசைகள் நடைபெற்றன.

சம்பவத்தில் உயிரிழந்த அரச பணியாளர்களை நினைவு கூரும் நிகழ்வு அரசசெயலகத்தில் நடைபெற்றது. அத்துடன் முல்லை நகர் எங்கும் தமது சிதைவடைந்த வீடுகளில் இறந்த தமது உறவுகளின் ஆத்மசாந்திவேண்டி பிரார்த்தித்தனர் முல்லை நகர் எங்கும் அழுகுரல் ஒலித்துக்கொண்டிருந்தது.

இதேவேளை சுனாமி அனர்த்தம் காரணமாக உயிரிழந்தவர்களை ஒருமித்து நினைவு கூரும் வைபவம் ஒன்று நேற்று மாலை 3.00 மணிக்கு வவுனியா முத்தையா மண்டபத்தில் நடைபெற்றது. வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந் நிகழ்விற்கு சங்கத் தலைவர் எஸ். குமார குலசிங்கம் தலைமை வகித்தார்.

இந் நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் மூர்த்தி. பட்டானிச்சூர் புளியங்குளம் பள்ளிவாசல் மௌலவி அமுர்தீர் ஆகியோர் உரையாற்றினர்.

இதேவேளை முல்லை மாவட்டத்தில் கரையோரக் கிராமங்கள் மீது இடம்பெற்ற சுனாமி கடற்கொந்தளிப்புக் காரணமாகப் பலியானவர்களை நினைவு கூர்ந்து நேற்று அவர்களினது உறவினர்கள் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் வீதியில் ஐயனார் கோவிலுக்கு அருகில் புதைக்கப்பட்ட இடத்தில் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

(லோ,20,27,21,08)

### வீரவணக்க...

பட்டதைத் தொடர்ந்து வீரவணக்க உரைகளை தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசன், தோட்டச் தொழிற்சங்கச் செயலரும், மத்திய மாகாணசபை உறுப்பினருமான வேலாயுதம், பாராளுமன்ற உறுப்பினர்களான பத்மினி சிதம்பரநாதன், ஈழவேந்தன், மாவை சேனாதிராசா அரசறிவியற் கல்லூரிப் பொறுப்பாளர் அரசண்ணா, ஞானம்ஸ் விளையாட்டுக்கழக உறுப்பினர் வை. ரவிசங்கர் ஆகியோர் நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து வித்துடலுக்கு மலரஞ்சலியை யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி ஆரம்பித்து வைக்க பொதுமக்களால் அஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்னர் வித்துடல் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் நெல்லியடிச்சந்தி வதிரிச்சந்தியூடாக எல்லங்குளம் சந்திக்கு எடுத்துச்செல்லப்பட்டு மாவீரர் துயிலும் இல்லம் வரை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மாணவர்களின் பாண்ட் வாத்தியத்துடன் வீதியின் இரு மருங்கிலும் நின்ற ஆயிரக்கணக்கான மக்களின் மலரஞ்சலியுடன் துயிலுமில்லத்தில் இறையவனின் உடல் விதைக்கப்பட்டது. (கா)

### சனாதிபதி...

கோரப்பட்டுள்ளது. இந்த நிலையில் இவ்வாறான மதிப்பீடு ஒன்றைச் சர்வதேச நாடுகள் ஏற்றுக் கொள்வதில் தயக்கம் காட்டலாம். எனத் தெரிவித்துள்ள அவர், இதேபோன்று தவறை மேற்கொண்டமையால் தான் ஆப்கானிஸ்தான் நாட்டை கட்டியெழுப்பச் கோரிய நிதியில் 4 பங்கினை மாத்திரமே சர்வதேச நாடுகள் வழங்கின என்பதைச் சுட்டிக்காட்டினார். (32)

### சுனாமி...

தொடர்பான நீண்டகால செயற்றிட்டத்திற்காக சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான பூரண அறிவுடையவர்கள் இந்தக்குழுவில் நியமிக்கப்படுவது அவசியம் எனவும் சுட்டிக்காட்டிய அவர், சுனாமிப் பாதிப்புத் தொடர்பாக முடிவை எடுக்கும் சிலர் இன்றுவரை அந்தப்பிரதேசங்களுக்குச் செல்லவில்லை. இது தொடர்பான முடிவை எடுப்பவர்கள் மீள்கட்டுமான நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள சிலர் ஒரு நலன்புரி நிலையத்தைக் கூடச்சென்று பார்வையிடவில்லை என்றே தான் நினைப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

### சுனாமியில்...

நடைபெறவுள்ளன. யாழ்.குடாநாட்டில் பிரதான வீதிகள், சந்திகள், ஆலயங்கள் பொது இடங்கள், மக்கள் கூடும் இடங்கள் எனப்பல இடங்களிலும் நினைவு நிகழ் வுகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளதோடு தென்மராட்சியில் சாவகச்சேரி இந்து கல்லூரியிலும் நல்லூர் நாவலர் கலாச்சார மண்டபத்திலும் வடமராட்சியில் மணற்காட்டில் இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்த இடங்களிலும் நெல்லியடியில் மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களிலும் யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் கோண்டாவில் செயலகத்திலும் நினைவு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இதேவேளை மலையக மக்கள் முன்னணியினரும் நினைவுச் சுடர்களை ஏற்றி நினைவு கூரலை நடாத்த ஏற்பாடுகள் செய்துள்ளனர். முன்னணியின் தலைவர் பி.சந்திரசேகரன் அவர்களின் தலைமையில் தலவாக்கலை சுற்று வட்டத்தில் இந் நிகழ்வுகள் நடைபெறவுள்ளது. அத்தோடு மலையக மக்களின் வீடுகளிலும்இந்நாளை நினைவு கூரவுள்ளனர்.

### அகதி முகாமிலிருந்த...

அழைத்தனர்.

இதனால் பீதிக்குள்ளான அப் பெண் இரவு வேளை எந்தவித விசாரணைக்கும் வரமுடியா தெனவும் மறுத்துவிட்டார்.அவரது கணவரும் மனைவியை முகாமிற்கு வெளியே அனுப்ப முடியாதெனக் கூறினார்.

இதனையடுத்து அங்கிருந்த மக்கள் அதிரடிப்படையினருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர். முகாமைவிட்டு ஒரு பெண்ணை இரவுவேளை விசாரணை என்ற போர்வையில் அழைத்துச் செல்வதற்கு அனுமதிக்கமாட்டோம் எனக் கூக்குரலிட்டனர்.

இதேவேளை சம்பவம் நடைபெற்ற முகாமிற்கு விரைந்துசென்ற அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் இரவு நேரத்தில் படையினர் அழைப்பது தவறெனவும் இதனை எந்தவிதத்திலும் அனுமதிக்க முடியாதெனவும் கூறினார்.

இதற்குப் படையினர் அவரைத் தகாத வார்த்தைகளால் பேசியதுடன் தமக்குச் சகல அதிகாரமும் உள்ளதாகத் தெரிவித்தனர். இதனால் அந்த அகதி முகாமிலுள்ள மக்கள் பயப்பீதிக்கு உள்ளாகியுள்ளனர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 26ஆம் திகதி அச்சிட்டு வெ்ளியிடப்பட்டது